பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 18 ஞாயிற்றுக்கிழமை 31.01.2021 கதிர் 87

### இனி இது இரகசியம் அல்ல!

வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பதில் நமது அரசியல்வாதிகள் வலுசூரர்கள். அதிலும் நம் யாழ்ப்பாணத்து கோடரிக்காம்பு அரசியல்வாதி - அமுல்பேபி - பொது நிவாரணத்தை ஆட்டையைப்போட்டு தமது நிவாரணமாக பக்கம்02

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீளமைக்க பல்கலை பேரவை அனுமதி

### அமைதித் தூபி என்ற பெயரில் கட்டப்படும்

திருநெல்வேலி, ஜன. 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட போர்க்கால முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைதித் தூபி என்ற பெயரில் மீண்டும் கட்டியெழுப்ப பல்கலைக்கழகப் பேரவை அனுமதி வழங்கியிருக்கிறது.

மாதத்தின் இறுதிசனிக்கிழமையான நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

தூபி விவகாரம் தொடர்பில் நடந்தவற்றை துணைவேந்தர் சிறிசற்குணராஜா 2

## வினாத்தாளை வெளியிட்டாராம் விரிவுரையாளர் பணி நிறுத்தம்

### யாழ்.பல்கலையில் நடவடிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரைப் பணி நிறுத்துவது என்று நேற்று சனிக்கிழமை கூடிய பேரவை முடிவு செய்துள்ளது. பரீட்சை வினாத்தாள்களை மாணவர்களுக்கு கசியவிட்டார் என்கிற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவரை பணி நிறுத்தம் செய்வது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பொருளியல் விஞ்ஞானத் துறை விரிவுரையாளராக மிக அண்மையிலேயே 2

# தீர்வு இல்லாத அரசமைப்பு எந்தவிதப் பயனும் அற்றது

### தமிழரசுக் கட்சியின் வவுனியாக் கூட்டத்தின் பின்னர் சுட்டிக்காட்டினார் சுமந்திரன் எம்.பி.



புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குக் கட்டாயம் தீர்வு காணப்பட வேண்டும். அது இல்லையேல் அந்த அரசமைப்பு எந்தவித பிரயோசனமும் அற்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 11

## ஐ.நாவுக்கு எதிராகப் பொங்கியெழும் வாசு மனித உரிமைகள் சபை நடுநிலையற்றதாம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் இரு தரப்பினராலும் முன்வைக்கப்படும் கருத்துக்களை ஆராய்வது அவசியமாகும். இலங்கை விவகாரத்தில் மனித உரிமைகள் சபை நடுநிலைத்தன்மையைப் பேணவில்லை.

- இவ்வாறு நீர்வழங்கல்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடன் இலங்கை நட்புறவுடன் செயற்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகப் போர் முடிவடைந்த 2

## மணிக்கு எதிரான கட்சி வழக்கில் கொழும்பிலிருந்து சட்டத்தரணி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.31

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து விலக்கப்பட்ட மணிவண்ணன் உட்பட 4 பேரின் வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எதிர்வரும் 3 ஆம் திகதி விசாரணைக்கு வருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையில் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட 2

## கொரோனாச் சாவு 313ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 313 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 300 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

## துறைமுகக் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குத் தாரைவார்க்காதீர்!

### அமைச்சர்கள் சிலர் போர்க்கொடி!

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு அரசுக்குள் அமைச்சர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை அமைச்சரவையில் கிழக்கு முனையத்தை வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழுவினர், அவ்வாறாக அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பு வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் அமைச்சர் உதயகம்மன்பில, நாடாளுமன்ற 2

## டொமினிக் ஜீவாவுக்கும் கொரோனாத் தொற்று

மறைந்த இலங்கையின் புகழ்பெற்ற எழுத்தாளர் டொமினிக் ஜீவா கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை மரணத்தின் பின்னான பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

கடந்த 28ஆம் திகதி 94 ஆவது வயதில் அவர் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது 2

## மேலும் 848 பேருக்கு கொரோனா தொற்று


கொழும்பு, ஜன. 31

இலங்கையில் நேற்றும் 848 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 293 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 56 ஆயிரத்து 277 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 703 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## கொவிட் ஆஸ்பத்திரியிலிருந்து பரீட்சை எழுதும் 4 மாணவர்கள்



கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற 4 மாணவர்கள் கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகி தற்போது அவர்கள் பெரிய கல்லாறு பிரதேச வைத்தியசாலை கொவிட் - 19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் வைத்தியசாலையில் இருந்தே அவர்கள் பரீட்சை எழுதி வருகின்றார்கள். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் இறுதி வருட இரண்டாம் 11

## இதுவரை 37,825 பேருக்கு ஏற்றப்பட்டன தடுப்பூசிகள்

இலங்கையில் இதுவரை 37 ஆயிரத்து 825 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் 5 ஆயிரத்து 286 பேருக்கும், நேற்று 32 ஆயிரத்து 539 பேருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் வக்ஸின் மைத்ரி திட்டத்தின் 2

## இனி இது...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விநியோகித்தவர் – சூராதி சூரர் போலும்.

கோட்டாபய அரசு கொடுக்காத நியமனத்தைத் தாம் பெற்றுத் தருவார் என்று வடக்கு மக்களுக்குக் கயிறு கொடுத்தே வாக்குகளைச் சூறையாடியவர் அவர்.

அவரை நம்பி வாக்களித்த மக்கள் இப்போது ஆறு மாதங்களாகியும் காரியம் ஏதும் நடக்காததால் மண் அள்ளி வீசித் திட்டித் திரிகின்றனர்.

அத்தகைய கயிறு கொடுப்புக் கதைகளைச் சமாளிக்க இப்போது புதுத் தந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றார் அவர்.

ஜீ.சீ.ஈ. உயர்தரம் படிக்காத – வறுமைக் கோட்டுக்குள் வாழும்/ வாடும் – குடும்பங்களைச் சேர்ந்த – ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் அறிவித்தார். அதில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்குரிய 'கோட்டா' தம் மூலம்தான் வழங்கப்படுகின்றது, தனக்கு வாக்களித்தால் மட்டுமே அதைத் தவறாமல் தாம் பெற்றுத் தருவார் என்று அந்த வேலை வாய்ப்புக்காக விண்ணப்பித்திருந்தவர்களை, தாம் ஆளணி அமைத்துத் தொடர்பு கொண்டு கயிறுகொடுத்தார் நம் அமுல் பேபி. அதன் மூலம் வாக்குகளைக் கனகச்சிதமாக – அபரிமிதமாக – சூறையாடினார்.

ஆனால் கோட்டா அரசு வேறு விதமாக நினைத்தது. வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கு அந்த நியமன எண்ணிக்கை 'கழுதைதேய்ந்து கட்டெறும்பான' கதையாகி விட்டது. ஆரம்பத்தில் வடக்கு மாகாணத்துக்கு இருபதாயிரம் பேருக்கு நியமனம் கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வடக்கு, கிழக்கில் அந்த நியமனங்களை ஒரேயடியாகக் 'கட்' செய்து தனது பேரினவாதக் கைவரிசையை அப்பட்டமாக வெளிப்படுத்தியது கோட்டா அரசு. அதனால் மாட்டிக் கொண்டார் அமுல் பேபி. அவரை நம்பி வாக்களித்த மக்கள் அவரை வையத் தொடங்கி விட்டனர்.

இந்த சூழ்நிலையில் இப்போது களநிலைமையில் மாற்றம். அரசுத் தரப்புடன் நிற்கும் எம்.பிக்கள், அமைச்சர்களுக்கு தலா அறுநூறு நியமனங்கள் என்பது கோட்டா அரசின் பிந்திய ஏற்பாடு.

வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அங்கஜன் இராமநாதன், மஸ்தான், வவுனியா திலீபன் என்று பலருக்கும் கோட்டா உண்டு எனத் தெரிகின்றது. தேசியப் பட்டியல் எம்.பியான சுரேன் இராகவனுக்கும் உண்டு.

சுரேன் இராகவனின் பரிந்துரையில் நியமனம் பெறுவோர் வீடுகளுக்கு நமது அமுல்பேபியின் ஆளணி நேரில் 'விசில்' அடிக்கின்றதாம். தங்களின் அமுல்பேபி ஏற்பாட்டில் தான் அந்த நியமனம் என்று கதை அளக்கின்றதாம் அந்த ஆளணி.

யாருடைய கோட்டாவையோ தன்னுடையதாக காட்டும் 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும்' தனது பரவணிப் பழக்கத்தை நம் அமுல்பேபி விடமாட்டார் போலும்.

கொவிட் காலப் பாதிப்புக்களை ஒட்டி கச்சேரிக்குப் பொதுத் தரப்பு மூலம் கிடைத்த நிவாரணப் பொருள்களை ஆட்டையைப் போட்டு தன்னுடையதாக விநியோகித்த விவகாரத்தில் தொடங்கி 'வழித் தேங்காய்' விளையாட்டு ஒவ்வொரு விடயத்திலும் தெருப் பிள்ளையாருக்கு உடைக்கும் பண்பியல்பாகத் தொடர்கின்றது.

பார்த்தார் சுரேன் இராகவன். இப்போது தனது பரிந்துரையில் வேலை வாய்ப்புப் பெறுவோருக்கு முற்கூட்டியே கடிதம் எழுதித்தம் பங்களிப்பைத் தெரிவித்து வருகின்றார்.

வேலை வாய்ப்புப் பெறும் பொதுமக்கள் தரப்புத்தான் பாவம்.

ஒருவரிடம் தொடர்பு கொண்டு, அவர் மூலம் வேலை கிட்ட ஏற்பாடு செய்திருப்பதாகப் பார்த்திருக்க, அவரும் எழுத்து மூலம் உறுதியுரை தர, இன்னொரு தரப்பு திடீரென முளைத்து நாங்கள்தான் வேலை தர ஏற்பாடு செய்துள்ளோம் என்று கூறினால், மக்கள் மலைப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

நியமனம் பெறுவோர் பட்டியலை – விவரங்களை – அரச அதிகாரிகளிடமிருந்து உருவிப் பெறக் கூடியதான – 'உறுக்கி'ப் பெறக் கூடியதான – அரச அதிகாரத்தில் அமுல்பேபி தரப்பு இருப்பதால்தான் இத்தனை சண்டப் பிரசண்டமும்.

★ ★ ★

தமிழ் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைப் பற்றிய உள்வீட்டுத் தகவல்களைச் சேகரித்து வெளிப்படுத்தும் செய்தியாளனாக நான் நீண்டகாலம் இருந்திருக்கிறேன். 80 – 83 ஆம் ஆண்டுகளில் தளபதி அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்வீட்டுப் பிய்ச்சல் பிடுங்கல்களை வெளியே கொண்டுவந்த அனுபவம் எனக்கு உண்டு. தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் போன்றவை தொடர்பான செய்திகளை சேகரிக்கும் 'றவுண்ட்' எனக்கு செய்தியாளர் பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்தது.

கூட்டணியின் பொறி பறக்கும் உள்கட்சிக் கூட்டங்களின் சுவாரஸிய தகவல்களை அம்பலப்படுத்துவது எமது சாதனைக்குரிய பணியாக இருக்கும்.

பொதுவாக அத்தகைய கூட்டங்களில் முதல் விவகாரமாக இருப்பது முன்னைய கூட்டத்துக்கும் அன்றைய கூட்டத்துக்கும் இடையில் கூட்டமைப்பு சந்தித்த அரசியல் பின்னடைவுகளை அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறி ஆராய்வதுதான்.

ஆனால் நேற்று வவுனியாவில நடந்த இலங்கைத் தமிழரசின் அரசியல் குழுக் கூட்டத்தில் அப்படி ஏதும் நடக்கவில்லையாம். அப்படி என்றால் எதற்காக அந்தக் கூட்டம்? ஒருவரை ஒருவர் மாறி மாறி முதுகு சொறிந்து விடுவதற்கான கூட்டமா அது?

தமிழரசு கட்சியைப் பொறுத்தவரை அதற்கு அண்மையில் ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவு யாழ் மேயர் பதவியை கோட்டை விட்ட விவகாரமாகும். அதுபற்றி நேற்று நடந்த கூட்டத்தில் பங்கு பற்றிய ஏழுபேருமே – மாவை சேனாதிராசா, சி.வீ.கே. சிவஞானம், ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், கலையரசன், சிறிதரன், செல்வராசா ஆகிய ஏழுபேருமே – வாய் திறக்கவில்லையாம்.

அப்படியானால், தமிழரசு அரசியல் குழு எதற்குக் கூடியது? ஏற்பட்ட தவறை ஆராயாமல் அடுத்து என்ன குளறுபடி செய்யலாம் என்று திட்டமிடுவதற்கா?

பழுத்த அரசியல்வாதியான மாவை, சி.வீ.கே., அனல் பறக்கும் பேச்சாளர் சிறிதரன், சட்டமேதை சுமந்திரன் எல்லோரும் ஆளாளுக்க முதுகு சொறியும் வேலைக்கா கூடினர்?

அதற்குள் ஒரு செய்தி. தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடி மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க முடிவு செய்தது என்று.

'ஆடு வெட்ட முதல் ஏதோ தனக்கு வேண்டும்' என்று கேட்டமாதிரி மாகாண சபைத் தேர்தலே நடக்குமா என்பது தெரியாதபோது மாவையின் பகல் கனவை நிறைவேற்றுமாற்போல கதையளக்கும் செய்தி அது.

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டோம். அப்படி ஒரு தீர்மானமும் இல்லை என்று அடித்துக் கூறினார் அவர்.

என்ன, ஏது என்று தேடிப்பார்த்தேன்.

யாழ் மாநகரசபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் மீண்டும் ஆர்னோல்ட்டைத்தான் மேயர் வேட்பாளராக நிறுத்துவது என்று தாங்கள் தங்களுக்குள் தீர்மானித்து விட்டு, பின்னர் அதனை மாநாகரசபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானமாகக் காட்டிய மாவையின் 'பம்மாத்து' விளையாட்டுத்தான் இதிலும். பாவம் சிறிதரன். இம்முறை அவர் துணை போயிருக்கின்றார். அவ்வளவே.

கூட்டத்தின் இடைநடுவில் திடீரென சிறிதரன், வரும் மாகாணசபைத் தேர்தலில் மாவையை முதல்வர் வேட்பாளராக நிறுத்துவோம் என்று கூற, மற்றைய ஐவரும் 'கப் சிப்'.

'நான் அதனை ஏற்கிறேன்' என மாவை மட்டும் ஈனக் குரலில் கூறியமையுடன் விடயம் முடிந்து விட்டது.

ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்குவது போல, சிறிதரனின் நான்கு சொல் பேச்சும், மாவையின் அதை ஏற்கும் இரண்டு சொல் இணக்கமும், ஏனையோரின் எரிச்சலுடன் கூடிய மௌனமும், ஒன்று சேர்ந்து ஒரு தீர்க்கமான தீர்மானம் மாதிரி வழமைபோல கொடிகட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டன.

பாவம், தமிழரசுக் கட்சி! பாவம், அக்கட்சியைத் தலைமைப் பங்காளியாகக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு! பாவம், அந்தக் கூட்டமைப்பை நம்பியிருக்கும் தமிழ் மக்கள்...!

இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.

– மின்னல் –

## ஐ.நாவுக்கு எதிராகப்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காலத்தில் இருந்து பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உள்ள பொறிமுறையின் அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையைக் கையாள வகுக்கப்பட்ட திட்டங்களை 2015 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த நல்லாட்சி அரசு செயற்படுத்தவில்லை.

மனித உரிமைகள் சபை விவகாரம் கூட அரசியல் பழிவாங்கலுக்காகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரச தலைவருக்கும் நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோக செயற்பாடாகவே கருத வேண்டும்.

30/1 தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அரசமைப்பிற்கு முரணானது. 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரின் போது 30/1 தீர்மானத்திலிருந்து எமது அரசு உத்தியோகபூர்வமாக விலகியது.

இந்தத் தீர்மானத்தை அரசு சுயாதீனமான முறையில் எடுத்தது. பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை இலங்கையின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இம்முறை திருத்தியமைக்கப்படும். உள்ளகப் பிரச்சினையை சர்வதேச அரங்குக்குக் கொண்டு சென்று ஒரு தரப்பினர் இலாபமடைகின்றார்கள். இதனால் சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை – என்றார்.

## மணிக்கு எதிரான கட்சி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
13 உறுப்பினர்களில் மணிவண்ணன் உட்பட 4 பேர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர். இவ்வாறு நீக்கப்பட்ட நால்வரும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் அதற்கு எதிராக வழக்கு தொடுத்தனர். வழக்கு முடியும் வரையில் கட்சி நீக்கத்துக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறு விதிக்கப்பட்ட தடையை நீக்ககோரியே தற்போது மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்சியின் சார்பில் இம்முறை கொழும்பில் இருந்து ஒரு பிரபல சட்டத்தரணி முன்னிலையாகவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

## இதுவரை 37, 825...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனிகா கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் நேற்று முன்தினம் தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

## டொமினிக் ஜீவா...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ரிசோதனை முடிவில் அவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

டொமினிக் ஜீவாவின் புகழுடல் நேற்று மாலை பொரளையில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைய தகனம் செய்யப்பட்டது.

## வினாத்தாளை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவு செய்யப்பட்டிருந்த ஒருவரே இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவர் விரிவுரையாளராக வருவதைத் தடுப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் நடந்து வந்தன என்று எழுப்பப்பட்ட சர்ச்சைக்குப் பின்னரான சூழ்நிலைகளிலேயே அவர் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் அவர் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாளை முன்கூட்டியே தெரியப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அவரது மின் அஞ்சலில் இருந்து வினாத்தாள் மாணவர்களின் மின் அஞ்சலுக்கு அனுப்பப்பட்டமையை அவரால் மறுக்க முடியாத நிலையில் அவர் தவறிழைத்தமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவரைப் பணி நிறுத்தம் செய்வதற்குப் பேரவை முடிவெடுத்திருப்பதாக பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

## முள்ளிவாய்க்கால்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீண்ட அறிக்கை ஒன்றின் மூலம் பேரவை உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தினார். அதன் பின்னர் முன்னைய தூபி இருந்த இடத்தில் அமைதித் தூபியை அமைப்பதற்கான அனுமதியைப் பேரவை வழங்கியது.

இறுதிப் போரில் உயிரிழந்த தமிழர்களின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இராணுவம், பொலிஸ் ஆகிய தரப்புகளின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவே தூபியை இடிக்க வேண்டியேற்பட்டது என்று துணைவேந்தர் தெரிவித்திருந்தார்.

தூபி இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் உணர்வுக் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. தூபி இடிக்கப்பட்டத்தை எதிர்த்தும் அழிக்கப்பட்ட தூபி அதே இடத்தில் மீளவும் கட்டப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் மாணவர்கள் சிலர் பட்டினிப் போராட்டத்தில் குதித்தனர். அரசியல்வாதிகள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்திற்குப் பேராதரவு வழங்கினர்.

தூபி இடிப்பைக் கண்டித்து வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் ஒரு நாள் கடையடைப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட இந்த மிகப் பெரிய கொந்தளிப்பு நாடுகளைக் கடந்து இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கும் விரிவாக்கம் பெற்றது. இதனால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக தூபியை மீளக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணைவேந்தர் சிறிசற்குணராஜா பல்கலைக்கழக மாணவர்களுக்கு உறுதிமொழி வழங்கினார். அதனை உறுதிபடுத்தும் விதமாக மாணவர்களோடு இணைந்து புதிய தூபிக்கான அடிக்கல்லையும் நட்டுவைத்து மாணவர்களின் பட்டினிப் போராட்டத்தை முடித்து வைத்தார்.

இவை அனைத்தும் நடந்த பின்னர் நடைபெற்ற முதலாவது பேரவைக் கூட்டத்தில் தூபியை மீண்டும் நிறுவுவதற்குரிய முறையான அனுமதியை பேரவை வழங்கியது. முன்னர் அமைக்கப்பட்டிருந்த தூபி யாழ். பல்கலைக்கழக நிர்வாகத் தரப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் முறையான அனுமதியின்றிக் கட்டப்பட்டிருந்தது. இதனைக் காரணமாகக்காட்டி, சட்டத்திற்கு முரணான அந்தக் கட்டுமானத்தை அகற்றவேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

## துறைமுகக் கிழக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுப்பினர் திஸ்ஸ விதாரண உள்ளிட்ட – கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள – அரச தரப்பில் இருக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

# அரசமைப்புச் சபையாக மாறவேண்டும் நாடாளுமன்று என்கிறார் கிரியெல்ல!

புதிய அரசமைப்புக்கு அனைத்து இன மக்களது மற்றும் கட்சிகளது ஆதரவு தேவை என்றால் முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக அமைக்கவேண்டும்.

அரசாங்கம் அவ்வாறு செயற்படுமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி புதிய அரசமைப்பு தயாரிப்புக்கு சம்பந்தப்படும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு தயாரிப்புக்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பு தொடர்பாக தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு தயாரிப்புக்காக அரசால் புதிய குழுவொன்றை நியமித்திருக்கின்றது. குறித்த குழுவுக்கு மக்களின் கருத்துக்களை வழங்க முடியும் என அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் யோசனைகளையும் வழங்குமாறு எமக்கு அறிவித்திருந்தது. இதுதொடர்பாக நாங்கள் கலந்துரையாடி வருகின்றோம்.

அத்துடன் அரசாங்கத்துக்கு நெருக்கமான சட்டத்தரணிகளைக்கொண்ட குழுவை நியமித்து அரசமைப்பொன்றைத் தயாரிக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடு.

நியமிக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணிகள் தொடர்பில் எமக்குப் பிரச்சினை இல்லை. என்றாலும் புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதாக இருந்தால், நாட்டில் இருக்கும் அனைத்து இன மக்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.



அனைத்து இன மக்களது மற்றும் கட்சிகளது ஆதரவு தேவை என்றால் முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக அமைக்கவேண்டும்.

ஏனெனில் நாடாளுமன்றத்தில் அனைத்து இன மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அனைத்து கட்சிகளும் இருக்கின்றன. அரசாங்கம் அவ்வாறு செயற்படுமாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி புதிய அரசமைப்பு தயாரிப்புக்கு சம்பந்தப்படும்.

அத்துடன் அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டைக் கடிதம் ஒன்றின் மூலம் தெளிவாக அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கின்றது.

அனைத்து இன மக்கள் மற்றும் அனைத்து கட்சிகளின் ஆதரவில்லாமல் தயாரிக்கப்படும் அரசமைப்பினூடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இரண்டு அரசமைப்பு தொடர்பாகவும் விமர்சனங்கள் வருவதற்குக் காரணமாக இருந்தது, சிறுபான்மை மக்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தவறியமையாகும். அந்த தவறை மீண்டும் செய்யக்கூடாது. – என்றார்.

# மட்டு. மாணவர்கள் மத்தியிலும் தொற்று!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே கொரோனாத் தொற்று பரவும் அபாயம் அதிகரித்து வருகின்றது.

மட்டக்களப்பு நகரில் பிரபல கனிஷ்ட பாடசாலையான கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டு மாணவனுக்கு கொரோனாத் தொற்று கடந்த வெள்ளிக்கிழமை காலை கண்டறியப்பட்டுள்ளதாக கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

இந்த மாணவனுக்கு தொற்று உறுதியானமையையடுத்து பாடசாலையில் அந்த மாணவனின் வகுப்பில் பயிலும் 30 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளான மாணவனின் தந்தை தாதி உத்தியோகத்தர் அவர் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகச்சை பெற்றுவரும் நிலையில் மகனுக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சில தினங்களின் முன்னர் மட்டக்களப்பின் பிரபல பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரியின் 10 ஆம் ஆண்டு மாணவனுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், பல மாணவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 3,400 கொரோனாத் தடுப்பூசிகள்

இந்திய அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 3 ஆயிரத்து 400 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகின எனவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் உட்பட சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகள், மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமை புரியும் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு இந்தத் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலில் சிவப்பு வலயமாக்கப்பட்ட பல பிரிவுகள் அடங்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 573 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறைக் கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு மீள வாய்ப்பு!

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த சிறைக்கைதிகளை நேரில் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை மீண்டும் உறவினர்களுக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க எதிர்பார்த்து அது தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அதன்படி, கைதிகளைப் பார்வையிடுவதற்கான சுகாதார நடைமுறைகள் தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக, வாரத்தில் ஒரு நாளில் மாத்திரம் விளக்கமறியல் கைதிகளை அவர்களது இரத்த உறவுகள் நேரில் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கு மாதமொன்றில், ஒரு நாளில் மாத்திரம் தமது உறவினர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகசிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளைப் பார்வையிட வருகை தரும் உறவினர்கள், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்காமலிருக்கவும் ஆடைகளை மாத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

SURYA FOUNDATION
சூரிய நிறுவகம்
தேசிய மொழிக் கற்கை நிலையம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(சனி ஞாயிறு தினங்களில்)
* அரச அங்கீகாரம் பெற்ற தேசிய மொழி கற்கை நிலைய சான்றிதழ்
* சிங்களம் பேசுவதற்கான விசேட பயிற்சிகள்
* சிங்களம் எழுத வாசிக்க கூடிய உரிய கற்பித்தல் முறை
* O/L பரீட்சைக்கு தோற்றக்கூடிய வகையில் வழிப்படுத்தல்.
* அரச உத்தியோகத்தர்கள் கட்டாயம் சித்தி அடைய வேண்டிய சிங்கள பரீட்சையில் இலகுவில் சித்தியடையகூடிய வகையில் நெறிப்படுத்தல்.
* அரச அங்கீகாரம் பெற்ற இரண்டாம் மொழி சிங்கள கற்கை ஆசிரியர் குழாம்
* 4 மாதங்களை உள்ளடக்கி விசேட வகுப்புகள்
இடம்:
JAFFNA JKC KNOWLEDGE Center நிறுவனம்
சீரணி சந்திக்கு அருகாமை.
காலம்: சனி, ஞாயிறு
நேரம்: காலை -9.00 -10.00 AM
T.P: 077 177 6647

# கவலை கொள்ளத்தக்கதான அறிகுறிகள் இலங்கையில்!

## பின்லாந்து தூதுவர் வேதனை



சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான கவலைகொள்ளத்தக்க செயற்பாடுகளின் அறிகுறிகள் இலங்கையில் தென்படுகின்றன என இலங்கைக்கான பின்லாந்து தூதுவர் ஹரி கமரெய்னென் தெரிவித்துள்ளார்.

இலங்கை, பாகிஸ்தான், பூட்டான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான பின்லாந்து நாட்டின் தூதுவர் ஹரி கமரெய்னென் இதுதொடர்பாக அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அதன்படி இலங்கையில் வசிக்கும் மிகக்குறுகிய பின்லாந்து தமிழ்ச்சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கும் அவர், இலங்கையில் சிறுபான்மை தமிழ்ச்சமூகத்தின் நிலை தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் பின்வருமாறு டுவிட்டரில் பதிவுசெய்திருக்கிறார்:

இலங்கையில் வாழும் மிகக்குறுகிய பின்லாந்து தமிழ்ச்சமூகத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தேன்.

இலங்கையின் சிறுபான்மைத் தமிழர்களின் நிலை தொடர்பில் சுருக்கமாக விளக்கமளித்தமைக்கு அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

துரதிஷ்டவசமாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான கவலைகொள்ளத்தக்க செயற்பாடுகளின் அறிகுறிகள் இலங்கையில் தென்படுகின்றன. – என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# கொரோனாத் தொற்று மரணங்கள் மத, கலாசார மரபுகளை மதிக்குக!

## இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் மரணங்களின்போது ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை மற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பணியகம், தனது டுவிட்டர் தளத்தினூடாக இலங்கை அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்த டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

சர்வதேச மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களுக்கு அமைய இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் மக்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு மத நம்பிக்கைகளுக்கு இணங்க விடை கொடுக்கும் உரிமை அவர்களுக்கு இதனூடாகக் கிடைக்கும்.

ஆகவே, ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை மற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும்.– என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பணியகம் டுவிட்டர் பதிவில் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாரதத்தின் பிராயச்சித்தப் பொறுப்பு

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் – இலங்கைத் தமிழர்களின் வாழ்வியல் சிக்கலில் – இந்தியா வகித்த பாகம் யாது என்பதை மீண்டும் ஒரு தடவை கொழும்பு சான்றிதழ் அளித்து உறுதிப்படுத்தியிருக்கின்றது.

இந்த நற்(?)சான்றுப் பத்திரத்தை அளித்திருப்பவர் வேறு யாருமல்லர். இலங்கையில் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்பட்ட காலத்தில் – 2005 தொடக்கம் 2014 இறுதிவரை – ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ செயலாளராக இருந்த, அவரின் வலது கரமாக விளங்கிய லலித் வீரதுங்கதான்.

யுத்த காலகட்டத்திலும், பின்னரும் இந்தியாவைக் கையாள்வதற்கு – இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால் இலங்கை, இந்திய நாடுகளுக்கு இடையில் யுத்தத் தந்திரோபாயங்கள் உட்பட்ட இராஜதந்திர விடயங்களைக் கையாள்வதற்கு – இரு நாடுகளின் தலைவர்களாலும் இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்ட மூவர் குழுக்களில் இலங்கைப் பக்கத்தில் ஒருவர் ஜனாதிபதியின் செயலாளராகவிருந்த லலித் வீரதுங்க. மற்றைய இருவரும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்கள். ஒருவர் – இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ. மற்றவர் – அவரின் சகோதரரும் அந்த அரசில் மிக முக்கிய அமைச்சான, பொருளாதார விவகார அமைச்சை வைத்திருந்த பஸில் ராஜபக்ஷ.

லலித், கோட்டா, பஸில் – ஆகிய மூவரடங்கிய குழுவே அந்த யுத்தக் காலகட்டத்தில் இலங்கை சார்பில் இந்தியாவுடன் ஊடாடி விடயங்களைக் கையாண்டது. முழு விவரங்களும் இந்த மூவர் குழுவுக்கே அத்துப் படியாகவிருந்தன.

அத்தகைய மூவர் குழுவில் ஒருவரே புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசு வெல்வதற்கு இந்தியா உதவியது என்ற நற்சான்றிதழை புதுடில்லிக்கு இப்போது வழங்கியிருக்கின்றார். ஆகையினால் அதன் உண்மைத் தன்மையை யாரும் சவாலுக்கோ, சந்தேகத்துக்கோ உட்படுத்தத் தேவையில்லை என்பது தெளிவு.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பெறுவதில் இந்தியா மிக எதிர்பார்ப்போடும் உறுதியோடும் நிற்கின்றது.

அதை தாரை வார்ப்பதற்கு – வாரி வழங்குவதற்கு – கொழும்பு ஆட்சிப் பீடம் தயார். ஆனால் இடதுசாரித் தரப்புகளும், தொழிற் சங்கங்களும் அதற்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. இது, தேசிய சொத்தை அந்நிய தேசத்துக்கு விற்கும் அட்டூழியம் என்பது அவர்கள் கருத்து.

அவர்களைச் சமாளித்து, வெல்ல முடியாத யுத்தத்தை வென்று தந்த இந்தியாவுக்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உண்டு, ஆகையினால் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் திட்டத்தை எதிர்ப்பது முறையற்றது என்று அத்திட்டத்தை எதிர்க்கும் தமது பெரும்பான்மையின சகோதரர்களிடம் தெரிவித்து, அவர்களை வழிக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு லலித் வீரதுங்க போன்றோருக்கு உண்டு.

அது தப்பில்லை, நியாயம் என்று கூறலாம்.

ஆனால், லலித் வீரதுங்க, இந்தியாவுக்கு அளிக்கும் நற்சான்றிதழ், இழைக்கப்பட்ட யுத்தக் கொடூரங்களுக்காக இன்று நீதியும், நியாயமும் கிட்டாமல், இனப்பிரச்சினைக்குத் தீர்வும் இல்லாமல், எஞ்சியிருக்கும் தாயக பூமியையும் இழக்கும் பேரவலத்தில சிக்கிக் கொண்டு பரிதவிக்கும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் கடப்பாடு – பொறுப்பு – எத்துணை பெரியது, எவ்வளவு ஆழமானது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்பதையும் நாம் கவனிக்க வேண்டும் .

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை கொழும்பு வெல்வதற்காக உதவிய புதுடில்லிக்கு இலங்கை கடப்பாடு உள்ளது என்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவுக்கு தமிழர்களின் போராட்ட சக்தியாகவும் வலிமையாகவும் இருந்த புலிகளை அழிக்கும் கோரத்துக்கு உதவியதன் மூலம் தமிழர்களை நட்டாற்றில் பரிதவிக்க விட்ட வகையில் தமிழர்களுக்கு அதிகம் செய்ய வேண்டிய தார்மீகக் கடப்பாடு – பொறுப்பு – பெருமளவில் இந்தியாவுக்கு உள்ளது என்பதும் உண்மையாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு – இனப்பூசலுக்கு – பிணக்குக்கு – தீர்வு காண்பதில் இந்தியா பங்களிப்பது அதன் தாராளம் அல்ல. அதையும் தாண்டி அதன் கட்டாய கடப்பாடு. தார்மீகப் பொறுப்பு.

ஏதோ இலங்கை விவகாரத்தில் அயல் தேசம் என்ற முறையில் உதவும் பாணியில் பாவனை பண்ணிக் கொண்டு இனிமேலும் இந்தியா ஒளித்துப் பிடித்து விளையாட முடியாது.

அது எங்கள் பொறுப்பு, கடப்பாடு, தவிர்க்கவே இயலாத கட்டாய கடமை என்ற நிலைமை உணர்ந்து, அதனை சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்கும் வகையில் இந்தியா செயற்பட வேண்டும்.

வரப்போகும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் கூட முன்னைய காலம் போல இந்தியா திரும்பவும் மதில் மேல் பூனையாக இரட்டை வேடம் போட முடியாது.

புலிகளை அழிக்க உதவி, அதன் மூலம் தமிழர்களின் பேரம் பேசும் வலிமையைச் சிதறடித்து, தேசிய இனப் பிரச்சினையில் நட்டாற்றில் தாம் விட்ட தமிழருக்கு உரிய பிராயச்சித்தம் செய்வது அதன் கடமை.

லலித் வீரதுங்கவின் நற்சான்றிதழ் மறுவளமாக இதனைத்தான் எடுத்தியம்பி நிற்கின்றது.

## யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய சிகிச்சை நிலையம் திறப்பு!





யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டது.

இருதய சிகிச்சை வல்லுநர், வைத்திய கலாநிதி பூ.லக்ஸ்மன் இந்த சிகிச்சை நிலையத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர், பொது வைத்திய நிபுணர், பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, அகஞ்சுரக்கும் தொகுதிப் பிரிவு ஆகியவை இணைந்து யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர், பொது மருத்துவ நிபுணர் திருநாவுக்கரசு குமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிதீவிரமான குருதி அமுக்கம், இளவயதில் குருதி அமுக்கம் போன்ற சிறப்புக் கவனிப்பு தேவையுள்ள நோயாளிகள் இந்தச் சிகிச்சைப் பிரிவால் சிகிச்சையளிக்கப்படுவார்கள்.

அத்தோடு, இந்தச் சிகிச்சை நிலையம் ஊடாக மக்களுக்கு உயர் குருதியமுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஆராய்ச்சிப் பணிகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் தங்க சங்கிலி அறுப்பு சந்தேகநபர்கள் கைக்குண்டுடன் கைது!

வவுனியாவில் தொடர் தங்க சங்கிலி அறுப்புச்சம்பவங்களில் ஈடுபட்ட இருவரை, கைது செய்துள்ளனர் என வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியில் வவுனியா வேப்பங்குளம், சாந்தசோலை, இறம்பைக் குளம் பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பேர், வீதியால் செல்லும் பெண்கள் அணிந்திருந்த நகைகளை அறுத்துச்சென்றிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேரை, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்திருந்தமையுடன், அவர்க ளது உடைமையில் இருந்த கைக்குண்டு மற்றும் வாகன இலக்கத்தகடுகளையும் மீட்டுள்ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் அறுக்கப்பட்ட தங்க நகைகள் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் இன்று நீதிமன்றில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## தியாகி முத்துக்குமாரின் 12ஆம் ஆண்டு நினைவு!

யாழில் நடந்தது





தியாகி முத்துக்குமாரின் 12 ஆம் ஆண்டு நினைகூரல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி படுகொலை நினைவுத் தூபி வளாகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த நினைவு அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

தமிழகத்தைச் சேர்ந்த முத்துக்குமார் சென்னையில் வைத்து கடந்த 2009ஆம் ஆண்டு, இலங்கையில் தமிழினப் படுகொலையை நிறுத்த வலியுறுத்தியும், இனப் படுகொலைக்கு வல்லாதிக்க இந்திய அரசு துணைபுரிவதைக் கண்டித்தும் தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டு உயிர் நீத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசியப் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கையை வரையறை செய்க!

தேசியப் பாடசாலைகளின் வகுப்பறைகளில் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வரையறுக்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, வகுப்பறை ஒன்றில் குறிப்பிட்ட எண்ணிக்கையை விட மாணவர்களின் தொகை அதிகரிக்குமாயின் தரமான கல்வியை வழங்குவதில் சிக்கல் ஏற்படுமென அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்

இதற்கமைய, தரம் ஒன்று வகுப்பறை ஒன்றில் அதிகபட்சமாக 40 மாணவர்கள் மாத்திரம் உள்வாங்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய வகுப்பறைகளில் அதிக பட்சமாக 45 மாணவர்களை மாத்திரம் உள்ளீர்க்க வேண்டுமென கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# மகாத்மா காந்தியின் 73ஆவது நினைவு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது!









மகாத்மா காந்தியின் 73 ஆவது நினைவு தினம், யாழ்ப்பாணத்தில் நேற்று (சனிக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள அவரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் கே.பால சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மகாத்மா காந்தி என்று அழைக்கப்படும் மோகன்தாஸ் காந்தி 1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2ஆம் திகதி குஜராத் மாநிலம் போர்ப்பந்தரில் கரம்சந்த் காந்தி - புத்லிபாய் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

இந்தியாவின் விடுதலைக்காக வித்திட்ட முக்கியத் தலைவர்களில் இவருடைய பெயர்தான் முதன்மையாக உச்சரிக்கப்பட்டது.

இந்திய விடுதலை போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தியதன் காரணமாக அவர் விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை என அனைவராலும் அழைக்கப்படுகிறார்.

சத்தியாக்கிரகம் என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம், இந்திய நாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் ஏனைய சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

அஹிம்சை முறையில் போராடிய மகாத்மா காந்தி 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி, புதுடில்லி பிர்லா மாளிகை காந்தி சமிதி தோட்டத்தில் நாதுராம் கோட்ஸே ஆல், சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இவரது பிறந்த நாள் இந்தியாவில் காந்தி ஜெயந்தி என்று கொண்டாடப்படுகிறது. இவரது நினைவு தினத்தை இன்று தியாகிகள் தினமாகப் போற்றிக் கொண்டாடுகின்றனர்.

# கிழக்கு முனையம் இந்தியாவுக்கு உறுதி: அரசுக்குள் குழப்பம் என்கிறது எதிர்க்கட்சி!

கொழும்பு,ஜன31

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் உதய கம்மன்பில போன்றோரது கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளாமல் கிழக்கு முனையம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளதால் அரசாங்கத்திற்குள் கருத்து முரண்பாடுகளும் பிளவுகளும் உருவாகியுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்து நில் தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரொருவர் இந்தியாவில் இருக்கின்றார்.

இந்த தாக்குதலுடன் தொடர்புடைய ஏதேனும் இரகசியங்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு தெரிந்திருக்கக் கூடும். அதனை வெளிப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவா அரசாங்கம் இவ்வாறு தேசிய சொத்துக்களை அவ்வாறான நாடுகளுக்கு விற்று கொண்டிருக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்து வருகின்றமை தொடர்பில் நாம் கேள்வியெழுப்பிய போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய போதிலும் இது வரையில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

சர்வதேச உறவுகளை சுமுகமாகப் பேணுவதற்காக தேசியச் சொத்துக்களை விற்க வேண்டிய தேவை கிடையாது. எவ்வாறிருப்பினும் காலம் காலமாக மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு காணப்படுகின்ற கரும்புள்ளி தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மேலும் ஸ்திரமடைந்துள்ளது. – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாஸா எரிப்பு விடயத்தை வைத்து இலங்கைக்கு சர்வதேச தடைகளை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டாம்

## பைசர் முஸ்தபா கோரிக்கை

கொவிட்டில் மரணிப்பவர்களை அடக்கம் செய்யும் உரிமையை சர்வதேச மட்டத்தில் போராட்டங்களை மேற்கொண்டு அதனை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதில் தவறு இல்லை.

ஆனால், இதனைக் காரணமாகக் கொண்டு இலங்கைக்கு சர்வதேச ரீதியில் தடைகளை ஏற்படுத்துவது முஸ்லிம்களின் நோக்கமாக இருக்கக்கூடாது என முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொவிட்டில் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பில் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால் வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படும் கருத்துக்களில் எந்தவித விஞ்ஞான ரீதியிலான ஆதாரமும் இல்லை.

இதனை உலக சுகாதார அமைப்பு உட்பட சர்வதேச ரீதியில் 190 இற்கும் மேற்பட்ட நாடுகள் அனுமதித்திருக்கின்றன. இலங்கை அரசாங்கம் அதனை அனுமதிக்காமல் சுகாதார துறையின் மீது சாட்டிவிட்டு காலம் கடத்தி வருகின்றது.

அத்துடன் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதென்பது முஸ்லிம்களின் மத அடிப்படையிலான உரிமையாகும். அதனைப் பெற்றுக்கொள்ள எங்களால் முடிந்த முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுவருகின்றோம்.

ஜனாஸா எரிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நான்தான் ஆரம்பமாக அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்தேன்.

வழக்கு விசாரணையில் 3 பேர் கொண்ட நீதி அரசர்களில் இரண்டுபேர் எதிர்ப்பு தெரிவித்தமையால் அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஒரு நீதியரசர் ஆதரவாக இருந்தார்.



அதனை அடிப்படையாக்கொண்டு தற்போது 20 நாள் குழந்தையை எரித்தமை தொடர்பான வழக்கு தாக்கல் செய்திருக்கின்றேன். அதற்கு 5 பேர் கொண்ட நீதியரசர்கள் குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் இந்த விடயத்தில் ஆளும், எதிர்க்கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகளும் நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருக்கும் அரசியல் வாதிகளும் தங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். இதனை வைத்துக்கொண்டு யாரும் அரசியல் செய்வதாக நான் காணவில்லை. அத்துடன் சர்வதேச நாடுகளில் இருக்கும் முஸ்லிம் சகோதரர்கள் எமது உரிமைக்காக போராட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். அவர்களால் முடிந்த முயற்சிகளை அவர்கள் செய்கின்றனர்.

ஆனால் இதனை காரணமாகக் கொண்டு சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்குத் தடைகளை விதிப்பதற்கு முஸ்லிம்கள் முயற்சிக்க கூடாது.

ஏனெனில் எதிர்காலத்தில் நாட்டுக்கு சர்வதேச ரீதியில் பாதிப்பு ஏற்பட்டால் அதனால் இங்கு வாழக்கூடிய முஸ்லிம்களுக்கு அதன் பாதிப்பு ஏற்படுவதுடன் சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் சமூகம் என்றவகையில் எமக்கு அந்த அவப்பெயர் ஏற்படும்.

அதனால் எமது உரிமையை பெற்றுக்கொள்ள சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். மாறாக, இலங்கையை சர்வதேச ரீதியில் சிக்கவைக்கப்பது எமது நோக்கமாக இருக்கக்கூடாது. – என்றார்.

# பிரதேச செயலாளரை இடமாற்ற வேண்டாம் எனக்கோரி செட்டிகுள மக்கள் ஆர்ப்பாட்டம்!







வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து செட்டிகுளம் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் செட்டிகுளம் பிரதேச செயலாளர் தமக்கு சிறந்த முறையில் சேவையாற்றியுள்ளார் எனவும் அவரை இடமாற்றம் செய்யாமல் மீண்டும் இதே பகுதிக்கு நியமிக்குமாறும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏன் இந்த அவசர இடமாற்றம், நிறுத்து நிறுத்து எம்மவரை மாற்றுவதை நிறுத்து, யாருக்கு இலாபமீட்ட இந்த இடமாற்றம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன் ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கும் அரச அதிபருக்கும், மகஜர்களையும் கையளித்திருந்தனர்.

சம்பவ இடத்துக்கு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் கு.திலீபன் விஜயம் செய்திருந்தமையுடன், மக்களின் கோரிக்கைக்கான தீர்வை வழங்குவதாக உறுதிமொழி அளித்திருந்தார்.

அண்மையில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் க. சிவகரன், வேலணை பிரதேச செயலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளமையுடன் வேலணை பிரதேச செயலாளர் செட்டிகுளத்திற்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருவிகளை தனிமைப்படுத்தாமல் எடுத்துச் சென்றவர் கைதானார்!

கட்டாரிலிருந்து, செல்லப் பிராணிகளாக வளர்க்கும் ஒரு தொகை குருவிகளை எடுத்து வந்துள்ள நபர் ஒருவர் அதில் 20 குருவிகளைத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாமை தொடர்பில், பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த நிறுவன உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் குறித்த நபரை நீர் கொழும்பு வலயக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண கூறினார்.

இது தொடர்பாக மேலும் அறிய முடிவதாவது –

கடந்த ஜனவரி 7 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 62 குருவிகளை நபர் ஒருவர் கட்டாரிலிருந்து எடுத்து வந்துள்ளார். பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் உரிமையாளரே செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் குறித்த குருவிகளை எடுத்து வந்துள்ளார்.

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம், வெளிநாடுகளில் இருந்து பிராணிகளை எடுத்து வரும் போது, மிருக வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய அவை, கட்டுநாயக்கவில் உள்ள பிரத்தியேக இடத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்குதல் வேண்டும்.

இந்நிலையில் குறித்த 62 குருவிகளில் 42 குருவிகளை உரிய முறையில் தனிமைப்படுத்தியுள்ள குறித்த நபர் 20 குருவிகளை தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தாமல் எடுத்து சென்றுள்ளார்.

இந்நிலையிலேயே இது தொடர்பில் விசாரணை நடத்திய நீர்கொழும்பு வலய குற்றத் தடுப்பு பிரிவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஆஜர் செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

# ஊழல் தொடர்பான தரப்படுத்தல் சுட்டியில் இலங்கை 94 ஆவது!

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பின் 2020 ஆம் ஆண்டுக்கான ஊழல் தொடர்பான தரப்படுத்தல் சுட்டியில் இலங்கை 94 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் ஊழலை ஒழிப்பதற்கான உறுதிமொழிகளை நிறைவேற்றாமையே இந்தப் பின்னடைவிற்குக் காரணம் என்று அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி நதீஷானி பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஊழலுக்கெதிரான உலகளாவிய வலையமைப்பான ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர் நஷனல்அமைப்பால் 'ஊழல் தொடர்பான தரப்படுத்தல் சுட்டி' வெளியிடப்படுவது வழமையாகும்.

அந்தவகையில் 2020 ஆம் ஆண்டிற்கான ஊழல் தொடர்பான தரப்படுத்தல் சுட்டி கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

மேற்படி தரப்படுத்தல் சுட்டியைத் தயாரிக்கும் போது, ஒவ்வொரு நாடுகளிலும் பதிவாகியுள்ள ஊழல் சம்பவங்களின் அடிப்படையில், அவற்றுக்கு 0 – 100 வரையில் புள்ளிகள் வழங்கப்படும். அதன்படி 0 என்ற புள்ளியைப் பெறுகின்ற நாடு ஊழல் உயர்வாக உள்ள நாடாகவும் 100 புள்ளியைப் பெறுகின்ற நாடு ஊழலற்ற தூய்மையான நாடாகவும் நிர்ணயிக்கப்படும்.

அந்தவகையில் 2020 ஆம் ஆண்டுக்கான ஊழல் தரப்படுத்தல் சுட்டியின் பிரகாரம் இலங்கை 38 புள்ளிகளைப் பெற்று 94 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை 2019 ஆம் ஆண்டில் 93 ஆவது இடத்திலும் 2018 ஆம் ஆண்டில் 89 ஆவது இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இலங்கைக்கு அண்மையிலுள்ள நாடுகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை நோக்குகையில், இந்தியா 40 புள்ளிகளைப் பெற்று 86 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 31 புள்ளிகளைப் பெற்று 124 ஆவது இடத்திலும் பங்களாதேஷ் 26 புள்ளிகளைப் பெற்று 146 ஆவது இடத்திலும் பூட்டான் 68 புள்ளிகளைப் பெற்று 24 ஆவது இடத்திலும் நேபாளம் 33 புள்ளிகளைப் பெற்று 117 ஆவது இடத்திலும் மாலைதீவு 43 புள்ளிகளைப் பெற்று 75 ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டுக்கான ஊழல் தரப்படுத்தல் சுட்டியில் 88 புள்ளிகளைப் பெற்று நியூஸிலாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் முதலிடத்தைப் பிடித்துள்ளன.

அதாவது அவை ஊழலற்ற மிகவும் தூய்மையான நாடுகள் என்று ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் அடுத்தடுத்து ஆட்சியமைத்த அரசாங்கங்கள் ஊழலை ஒழிப்பதற்கான உறுதிமொழிகளை வழங்கியிருந்த போதிலும், அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமையே ஊழல் தரப்படுத்தல் சுட்டியில் இலங்கை தொடர்ந்தும் பின்னடைந்து வருவதற்கான மிகமுக்கிய காரணமாகும் என்று ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் இலங்கை கிளையின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சட்டத்தரணி நதீஷானி பெரேரா சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



● முருகபூபதி

# மல்லிகை ஜீவா விடைபெற்றார்!

## வரலாறாகிவிட்ட ஈழத்தின் இலக்கியக்குரல்!!

02

(நேற்றைய தொடர்ச்சி)

கனவுகளுடன் 1960களில் யாழ்ப்பாணத்திற்கு படிக்கச்சென்று, கனவுகளுடனேயே திரும்பியிருந்தேன். எங்கள் வீட்டிலிருந்து பார்க்கும் தூரத்தில் கடல். அந்தக்கடலின் மாந்தர்களும் கனவுகளுடன்தான் வாழ்ந்தனர். எனது கனவுகளிலும் வந்தனர்.




என்னத்தைச் செல்லிய சோமல மாதாவே. என்ற அவர்களது மொழி எனக்கோ கொஞ்சும்மொழி. நான் ரசிக்கும் பிரதேச மொழிவழக்கு.

அவர்களது பேச்சுமொழியில் கனவு என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதி மல்லிகைக்கு அனுப்பியிருந்தேன். ஆசிரியர் டொமினிக்ஜீவா அதற்கு கனவுகள் ஆயிரம் என்ற பெயரைச்சூட்டி 1972 ஜூலை மாத மல்லிகையில் அச்சிட்டு எனக்கு ஒரு பிரதியை தபாலில் அனுப்பியிருந்தார்.

எனது பிறந்த நாளன்று குறிப்பிட்ட இதழ் என் வசம் கிடைத்தது தற்செயலானது. ஏதிர்பாராதது.

அன்று முதல் அவரை பயிலத் தொடங்கினேன். உறவாடினேன்.

அவருடன் பயணித்த அனுபவத்தின் அறுவடையாக 2001இல் மல்லிகைஜீவா நினைவுகள் என்ற நூலை எழுதி அவருக்கும் வாசகர்களுக்கும் வழங்கினேன்.

தண்ணீரும் கண்ணீரும் கதைத்தொகுப்பைத் தொடர்ந்தும் சிறுகதைகள் எழுதிய ஜீவா, பின்னர் பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனம் முதலான தொகுதிகளையும் மேலும் சில நூல்களையும் இலக்கிய உலகிற்கு வரவாக்கியவர்.



சாலையின் திருப்பம் தொகுதிக்கு அவரது நீண்ட கால நண்பர் ஜெயகாந்தன் முன்னுரை எழுதியிருக்கிறார். தமிழகத்தின் சரஸ்வதி (1958), தாமரை (1968) முதலான இதழ்களும் ஜீவாவின் உருவப்படத்தை அட்டையில் பிரசுரித்து அவரைப்பற்றி எழுதி கௌரவித்திருக்கின்றன. குமுதம் இலவச இணைப்பாக ஜீவாவின் அனுபவமுத்திரைகள், கட்டுரைகளை மறுபிரசுரம் செய்து விநியோகித்திருக்கிறது.

இந்தத்தகவல்கள் யாவும் கடந்தகால செய்திகளே.


ஒரு சிறுகதை எழுத்தாளன், பெரிய பொருளாதார வசதிகளோ, உயர்ந்த கல்விப் பின்புலமோ இல்லாமல் தொடர்ச்சியாக 45 ஆண்டுகளுக்கும் மேலாக மல்லிகை இலக்கிய இதழை நடத்தியிருக்கிறார் என்ற சாதனையும் இன்று காலம் கடந்த செய்திதான்.

இலங்கை நாடாளுமன்றத்தில் விதந்து பேசப்பட்ட இலக்கியவாதியான டொமினிக் ஜீவாவுக்கு அந்தப்பெருமையை பெற்றுக்கொடுத்ததும் அவரது அயராத முயற்சியினால் வெளியாகிக்கொண்டிருந்த மல்லிகைதான்.

மாதாந்தம் மல்லிகையை வெளியிட்டவாறே 'மல்லிகைப்பந்தல்' பதிப்பகத்தின் மூலம் பல படைப்பாளிகளின் படைப்புகளையும் நூலுருவாக்கி விநியோகித்தார்.

எனது பாட்டி சொன்ன கதைகள், கங்கை மகள் என்பன மல்லிகைப்பந்தல் வெளியீடுகளே.

1975 இல் மல்லிகைப்பந்தல் என்ற பெயரை இலக்கியச் சந்திப்புக்காகவே அவர் தெரிவு செய்திருந்தார். அந்தப்பந்தலில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எனது முதலாவது (சுமையின் பங்காளிகள்) சிறுகதைத்தொகுதிக்கு வெளியீட்டு நிகழ்வை ஒழுங்குசெய்துவிட்டு, அஞ்சலட்டையில் அச்சிடப்பட்ட அழைப்பை எனக்கு அனுப்பியிருந்தார்.




ஆசிரியரும் எழுத்தாளருமான சு. இராஜநாயகன் நிகழ்ச்சிக்குத் தலைமை. இவர்தான் பத்திரிகையாளர் பாரதியின் அப்பா.

அந்தப் பயணத்தில் யாழ்ப்பாணத்தில் டானியல், வரதர், புத்தகக்கடை பூபாலசிங்கம் ஆகியோரையும் குரும்பசிட்டியில் கனகசெந்திநாதன் உட்பட பல படைப்பாளிகளையும் எனக்கு அறிமுகப்படுத்தியவரும் ஜீவாதான்.

யாழ்ப்பாணத்தில் மல்லிகை வெளியான காலங்களில் மாதாந்தம் ரயிலேறி கொழும்பு வந்து சில நாள்கள் தங்கியிருந்து, அலைந்து திரிந்து மல்லிகை பிரதிகளையும் விநியோகித்து இலக்கிய சந்திப்புகளிலும் கலந்துகொள்வார்.

கொழும்பு மலிபன் வீதியில் மல்லிகைக்குத் தேவையான வெள்ளீய அச்சு எழுத்துக்கள் மற்றும் அச்சிடும் காகிதாதிகளை வாங்கி ஏதும் யாழ்ப்பாணம் செல்லும் லொறிகளில் ஏற்றிவிட்டு மீண்டும் ரயிலில் யாழ்ப்பாணம் திரும்புவார்.


டொமின் ஜீவாவுடன் முருகபூபதி

கொழும்பு வருமுன்னர் எனக்கு ஓர் அஞ்சலட்டையில் தனது வருகை பற்றி எழுதிவிடுவார். எங்கள் நீர்கொழும்புக்கும் வருவார். எங்கள் ஊர் கடற்கரையில்தான் இலக்கிய சந்திப்புகள் நடைபெறும்.


நீர்கொழும்பூர் முத்துலிங்கம், சந்திரமோகன், பவாணி ராஜா, சிவம், ரட்ணராஜா, மு.பஷீர், நிலாம், தருமலிங்கம், செல்வரத்தினம் ஆகியோருடன் நானும் அந்தச் சந்திப்புகளில் கலந்துகொள்வேன்.

அத்தகைய ஒரு கடற்கரைச் சந்திப்பில்தான் மல்லிகை நீர்கொழும்பு சிறப்பிதழ் யோசனை மலர்ந்தது.


1972 பெப்ரவரி மாத மல்லிகை, நீர் கொழும்பு சிறப்பிதழாக வந்தது. அதனை வெளியிட்டு வைப்பதற்கு மண்டபம் கிடைக்காத சூழ்நிலையில் எங்களது சூரியவீதி இல்லத்திலேயே அதனை 19-02-1972ஆம் திகதி நடத்தினோம்.

யாழ்ப்பாணத்தில் போர் மேகங்கள் சூழ்ந்தன. அவரது தோழரும் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச செயலாளருமான தோழர் விஜயானந்தன் கொல்லப்பட்டார். சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அத்தோடு ஜீவா யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்து கொழும்பு வாசியாகிவிட்டார். அவர் கொழும்பு வாசியாவதற்கு முன்பே நான் ஆஸ்திரேலியா வாசியாகிவிட்டேன்.

நீண்ட இடைவெளிக்குப் பின்பு, 1990இல் மல்லிகை 25ஆவது ஆண்டு மலர் வெளியான சந்தர்ப்பத்தில் ஜீவாவை சென்னைக்கு அழைத்து அங்கே அவருடன் ஊர் சுற்றினேன். இந்தப் பயணத்தில் கண்ணதாசனின் மனைவியின் இறுதிச்சடங்கிலும் கலந்துகொண்டோம். இங்கு தான் சிவாஜிகணேசனையும் சந்தித்தோம்.




ஜெயகாந்தன், சிட்டி, சிவபாதசுந்தரம், சுந்தா சுந்தரலிங்கம், மேத்தா, இன்குலாப், திலகவதி, சிவகாமி, ராஜம்கிருஷ்ணன், ரகுநாதன், பாலகுமாரன், சு. சமுத்திரம், அக்கினி புத்திரன், செ.யோகநாதன், பொன்னீலன், கண.முத்தையா, அகிலன் கண்ணன், ரங்கநாதன், நர்மதா ராமலிங்கம், குணசேகரன், அறந்தை நாராயணன், தி.க.சிவசங்கரன், வைரமுத்து, மேத்தாதாஸன், இளம்பிறை ரஹ்மான், கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் நல்லகண்ணு, சி.ஏ. பாலன் உட்படப் பலரை சந்திப்பதற்கு இந்தப்பயணம் பயன்பட்டது.



இலங்கையிலும் ஜீவாவுடன் பல பயணங்களை, குறிப்பாக கொழும்பில் மேற்கொண்டிருக்கின்றேன்.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

# நாம் மௌனமாக இருக்கிறோம் என யாரும் நினைக்க வேண்டாம்!



திகாம்பரம் எச்சரிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பாக எதிர்வரும் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தாம் மௌனமாக இருப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹற்றனில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் கூறுகையில் –

அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக அறிவித்துவிட்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், மொட்டுக் கட்சிக்கு வாக்களித்த மக்களே இன்று அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்ச்சிக்கின்றனர். பொருள்களின் விலை நாளாந்தம் உயர்வடைந்து வருகின்றது. சிலவேளை நாமும் அந்தப்பக்கம் சென்றிருந்தால் இந்நேரம் மக்களின் சாபத்துக்கு உள்ளாக வேண்டி இருந்திருக்கும்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் இதுதொடர்பில் அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால், அவரின் உத்தரவைக்கூட கம்பனிகள் ஏற்பதாகத் தெரியவில்லை. மறுபுறத்தில் அடுத்த பேச்சில் வெற்றி நிச்சயம் என வீராப்பு பேசிய கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே கம்பனிகளை ஒரு நிலைக்குக் கொண்டுவரமுடியும். இதனைச் செய்வதற்கு மாற்றுத் தரப்பினர் தயாராக இல்லை. சம்பள விவகாரம் தொடர்பாக எதிர்வரும் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம்.

ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கமே அறிவித்தது. எனவே, அதற்கு அழுத்தம் கொடுத்துத்தான் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாம் மௌனமாக இருப்பதாக நினைத்துவிட வேண்டாம். சம்பள விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம். நாம் விழிப்பாக இருந்திருக்காவிட்டால், தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு இந்நேரம் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பார்கள்.

இதேவேளை, எமது ஆட்சியில் ஏழு பேர்ச்சஸ் காணியில் அமைந்த வீட்டை குருவிக்கூடு என விமர்சித்து, 20 பேர்ச்சஸ் காணியை பெற்றுக்கொடுக்கப் போவதாக சூளுரைத்தவர்கள் இப்போது 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கே நடவடிக்கை எடுத்துள்ளனர். – என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 25.01.2020 தொடக்கம் 29.01.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலவரம்

25.01.2021 தொடக்கம் 29.01.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர்சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா,தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய் போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது. இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

01. நுவரலியா மற்றும் மாத்தல பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

02. நுவரலியா, கந்தபோலா, ராகலா மற்றும் புசல்லாவ பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

03. அனுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் காரணமாக அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

04. பிபிலி, அம்பாறை, குலியபிட்டிய மற்றும் மொனராகல பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

05. கலென்பிந்துநுவேவா மற்றும் லகலா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

06. புத்தளம், யாழ்ப்பாணத்திலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாகவும் இறக்குமதி செய்யப்பட்ட வகைகள் கிடைக்காமையாலும் தம்புள்ள சந்தையில் உள்ளூர் சின்ன வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

07. அனுராதபுர, கலென்பிந்துநுவேவா, எம்பிலிபிட்டி மற்றும் சூரியவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

08. குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது

09.மாதல மற்றும் சூரியவேவா பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10. துருக்கி. நெதர்லாந்து மற்றும் பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 25.01.2021 | 26.01.2021 | 27.01.2021 | 28.01.2021 | 29.01.2021 |
|---|---|---|---|---|---|
| வா33ழைப்பழம் | 43 | 38 | 58 | | 35 |
| பப்பாசி | 38 | 33 | 75 | | 48 |
| அன்னாசி | 95 | 83 | 91 | | 95 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 50 | 52 | 50 | | 50 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 70 | 80 | 80 | | 80 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 25.01.2021 | 26.01.2021 | 27.01.2021 | 28.01.2021 | 29.01.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 63 | 58 | 78 | | 55 |
| பப்பாசி | 58 | 53 | 95 | | 68 |
| அன்னாசி | 115 | 103 | 110 | | 115 |

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 25.01.2021 | 26.01.2021 | 27.01.2021 | 28.01.2021 | 29.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 210 | 195 | 195 | | 160 |
| கேரட் | 120 | 14 | 140 | | 200 |
| கோவா | 50 | 60 | 60 | | 70 |
| தக்காளி | 120 | 110 | 110 | | 100 |
| கத்திரிக்காய் | 190 | 210 | 210 | | 230 |
| பூசணி | 160 | 160 | 160 | | 160 |
| புடலங்காய் | 170 | 170 | 170 | | 160 |
| பச்சை மிளகாய் | 600 | 700 | 700 | | 750 |
| தேசி | 127 | 120 | 120 | | 100 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 475 | 513 | 513 | | 500 |
| சின்ன வெங்காயம் ((இறக்குமதி) | 40 | 500 | 500 | | 450 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 86 | 91 | 100 | | 86 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 135 | 135 | 138 | | 143 |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 97 | 85 | 100 | | 91 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 485 | 495 | 495 | | 490 |
| தேங்காய் (சராசரி.) | 85 | 85 | 85 | | 85 |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 25.01.2021 | 26.01.2021 | 27.01.2021 | 28.01.2021 | 29.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 205 | 215 | 195 | | 195 |
| கேரட் | 135 | 145 | 175 | | 195 |
| கோவா | 45 | 50 | 50 | | 68 |
| தக்காளி | 95 | 95 | 105 | | 105 |
| கத்திரிக்காய் | 255 | 245 | 235 | | 265 |
| பூசணி | 155 | 155 | 155 | | 145 |
| புடலங்காய் | 165 | 175 | 165 | | 165 |
| பச்சை மிளகாய் | 675 | 675 | 725 | | 775 |
| தேசி | 105 | 95 | 105 | | 95 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 465 | 440 | 465 | | 500 |
| சின்ன வெங்காயம் ((இறக்குமதி) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 108 | 83 | 83 | | 73 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 128 | 128 | | 128 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 458 | 498 | | | |
| தேங்காய் (சராசரி.) | 84 | 74 | 79 | | 70 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 25.01.2021 | 26.01.2021 | 27.01.2021 | 28.01.2021 | 29.01.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 225 | 235 | 215 | | 215 |
| கேரட் | 155 | 165 | 195 | | 215 |
| கோவா | 65 | 70 | 70 | | 88 |
| தக்காளி | 115 | 115 | 125 | | 125 |
| கத்திரிக்காய் | 275 | 265 | 255 | | 285 |
| பூசணி | 175 | 175 | 175 | | 165 |
| புடலங்காய் | 185 | 195 | 185 | | 185 |
| பச்சை மிளகாய் | 695 | 695 | 745 | | 795 |
| தேசி | 125 | 115 | 125 | | 115 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 475 | 450 | 475 | | 510 |
| சின்ன வெங்காயம் ((இறக்குமதி) | 410 | 478 | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 118 | 93 | 93 | | 83 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 138 | 138 | | 138 |
| தேங்காய் (சராசரி.) | 89 | 79 | 84 | | 84 |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# சிறந்த பொழுது போக்கிடம்

# நெய்தல் கடற்கரை நகர்!

ப்ரியமதா பயஸ்




இலங்கையின் வடக்கு மக்களுக்கு கிடைத்துள்ள சிறந்த பொழுதுபோக்கிடம் – 'நெய்தல் பீச் சிற்றி'. யாழ்ப்பாணத்தின் நகரில் இருந்து 11 கிலோ மீற்றர் தூரத்தில் அழகிய கடற்கரையோரமாக அமைந்துள்ள சிறப்புமிக்க ஒரு பொழுது போக்கு இடம்தான் நெய்தல் பீச் சிற்றி.

யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியில் இருந்து 18 நிமிடங்களில் நெய்தல் கடற்கரை நகரை அடையும் குறிப்பிட்ட அளவு தூரத்தில் அமைந்துள்ளது. யாழ். மாவட்ட மக்கள் மட்டுமன்றி வடக்கின் அனைத்து பாகத்தினரும் இலகுவில் அடையும் மைய இடமாக அமைந்திருப்பதும் இதன் சிறப்புகளில் முக்கியமானது. யாழ் நகரின் மத்தியில் இருந்து ஏ9 பாதை வழியாகச் நேர்வழியாக சென்று சுண்டுக்குளி, அரியாலை, நாவற்குழி ஊடாக பயணித்து நாவற்குழி புகையிரத நிலையத்தை கடந்து நாவற்குழியின் மேற்குப் பக்கமாக வளைந்து ஏ32 பாதையின் கோயிலாக்கண்டி வழியாக இயற்கையின் வனப்பில் மிதந்து, வயல் காற்று மிதமான குளிரை முகத்தில் அள்ளித் தெளிக்க தச்சன் தோப்பு வழியாக பயணித்து வயலும் மண்ணும் நிறைந்த அந்த இயற்கை வனப்பை ரசித்தபடி வலது பக்கமாக திரும்பினால் எம் முன்னோர் வாழ்ந்த இயற்கை சுவாத்தியம் மிக்க இயற்கை மண்குடில் அலுவலகத்துடன் வரவேற்கிறது நெய்தல் கடற்கரை நகர்.



பொழுது போக்கு என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத இடம் வகிக்கிறது. இது மனிதர்க்கு மனிதர் மாறுபடும். இசையில் மிகுந்த ஈடுபாடு உள்ளோர்க்கு இசையே வாழ்க்கை. மற்றவர்க்கு அது பொழுதுபோக்காக இருக்கலாம். அதுபோலவே ஏனைய விடயங்களும். உடல் நலனில் அக்கறை உள்ளவர்க்கு விளையாட்டு பொழுதுபோக்கு. வெளியே சென்று விளையாட முடியாதவர்கள் கரம், சதுரங்கம், சீட்டுக் கட்டு போன்ற உள்ளரங்க விளையாட்டுக்களில் **(Indoor Games)** ஆர்வம் காட்டுவர். வேறு சிலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விருப்பம் கொண்டிருப்பர். திரைப் படங்கள் பார்ப்பது, திரைப்படப் பாடல்களைக் கேட்பது பலரது பொழுதுபோக்காக இருப்பதைக் காண்கிறோம். இன்னும் சிலர் இருக்கிறார்கள். குறிக்கோளின்றி மனதில் தோன்றியபடி அரட்டை அடித்தே பொழுதைப் போக்குவர். இங்கே குறிப்பிடத்தக்க செய்தி என்னவெனில் இத்தகைய பொழுதுபோக்குகள் அனைத்துமே இணையத்தில் கிடைக்கின்றன. இன்னொரு நண்பர் இருக்க வேண்டிய தேவை இல்லை. கணிப்பொறியும் இணைய இணைப்பும் இருந்தால் போதும். மிக எளிதாகப் பொழுது போய்விடும். ஆனால் இவை இன்றைய காலச் சூழலில் மனித வாழ்க்கையின் ஆரோக்கியத்தில் கை வைக்கும் விளையாட்டுக்களாகவும் பொழுது போக்குகளாகவுமே இருக்கின்றன. ஓய்வு நேரத்தில் வானொலியில் பாட்டுக் கேட்கிறோம். தொலைக்காட்சியில் திரைப் படங்கள் பார்க்கிறோம். வேறுபல தொலைக் காட்சி நிகழ்ச்சிகளையும் பார்க்கிறோம். இவை அனைத்துமே இணையத்தில் கிடைக்கின்றன. அவை இருந்த இடத்தில இருந்து பொழுதை போக்கி நோயை வாங்கிக்கொள்ளும் பொழுதுபோக்குகளாகவே இருக்கின்றன. தமிழ்த் திரைப்படப் பாடல்களை வழங்குவதற்கென்றே தனிச்சிறப்பான வலையகங்கள் உள்ளன. சில வலையகங்கள் தமிழ் தவிர பிறமொழிப் படங்கள், பாடல்களையும் வழங்குகின்றன. வேறுசில, தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும் நெடுந்தொடர்களின் காட்சிகளையும் வழங்குகின்றன. ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை என்றேனும் ஒருநாள் நீங்கள் பார்க்க முடியாமல் போனாலும் கவலை இல்லை. அதனைப் பின்னொரு நாளில் இணையத்தில் பார்த்துக் கொள்ளலாம். கட்டண அடிப்படையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நிகழ்நேரத்தில் வழங்கும் வலையகங்களும் உள்ளன. இவை தொழில் நுட்பம் தந்த நோயோடு கூடிய நன்மை. பக்கவிளைவை தரும் பொழுதுபோக்கு மருந்துகள்தான்.



ஆனால் பக்கவிளைவற்ற ஆரோக்கியத்தை அள்ளித்தரும் பொழுதுபோக்கிடமே இந்த நெய்தல் கடற்கரை நகர் .அநேகமானோரிடம் வாழ்க்கைக் காலம் முழுவதும் ஒரே பொழுதுபோக்கோ அல்லது பல பொழுது போக்குகளோ காணப்படலாம். எமது அழுத்தம் நிறைந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டு வருவது பொழுதுபோக்குகளாகும். இதன் சிறப்பு என்னவென்றால் பொழுது போக்கின் மூலம் ஆத்மதிருப்தியும் கிடைப்பதோடு அறிவும் புத்துணர்வும் அதிகரிக்கும். அறிவையும் புத்துணர்வையும் அதிகரிக்கும் பல விடயங்கள் நெய்தல் கடற்கரை நகரில் விரவிக் கிடக்கின்றன. நம் மூதாதையர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் விளையாட்டுக்கள் உடலையும் மனதையும் புத்துணர்ச்சியின் எல்லைக்கே கொண்டு செல்கின்றன. வில்வித்தைக் கழகம், குறிவைத்துத் துப்பாக்கி சுடும் கழகம், படகோட்டிடம் என உடலை வலிமைப்படுத்தும் விளையாட்டுக்களே முன்னுரிமை அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடாரம் வென்ற சோழனின் வழியில் படகோட்டும் விளையாட்டு சிறுவர்கள் முதல் இளைஞர் வரை சிலிர்ப்பூட்டும் விளையாட்டாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தை தெரிவு செய்து படகோட்ட அனுமதிக்காமல் பாதுகாப்பையும் சரியான நீரோட்ட சூழ்நிலையையும் கவனத்தில் கொண்டு அமைக்கப் பட்டுள்ள படகு செலுத்தும் குளம் இயற்கையின் அழகுடன் எந்த மாறுதலும் இன்றி இருப்பது படகில் செல்வது விளையாட்டுக்கல்ல, கடலில் மிதக்கிறோம் என்கின்ற உணர்வைத் தருகிறது. இந்த உணர்வு மூளை வரை புத்துணர்வை கொடுக்கிறது. படகில் இருந்து இறங்கியதும் உடல் புதுவித ஆரோக்கியம் ஒன்றைப் பிடித்து வைத்துக்கொள்கிறது.



அம்பெய்துதல், துப்பாக்கியால் சுடுதல் என்பன இப்போதைய இளையவர்களுக்கு புதிய விளையாட்டுக்கள் தான். ஆனாலும் அவர்கள் அவற்றில் திளைத்து நிற்பது உடல், உள ஆரோக்கியத்துக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை வெளிப்படையாக சுட்டி நிற்கிறது.

தற்போதைய சமூகம் மிகவும் மாறுபட்டுள்ள சூழலை தனக்குள் வரிந்து விடாப்பிடியாக வைத்துக்கொண்டுள்ளது. இன்று பொழுதுபோக்கு என்றால் என்னவென்று கூட சிறுவர்கள் அறியமாட்டார்கள். அதற்காகக் காலம் ஒதுக்க அவர்களுக்கு நேரமும் கிடையாது.

பெற்றோர் மூன்று நான்கு வயதிலேயே பிள்ளைகளை மேலதிக வகுப்புக்கு அழைத்துச் செல்கின்றார்கள். பாடசாலை செல்லத் தொடங்கியதும் தாய்மார்களின் பரீட்சையான புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகளுக்கு கன்றுகுட்டிகள் போல் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். அதனால் பிள்ளைகளுக்கு பொழுதுபோக்கு பற்றி சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை. எமது பரம்பரையின் முன் இருந்தவர்களுக்கும் எமக்கும் பலவிதமான பொழுதுபோக்குகள் கிடைத்தன. இன்று அவ்வாறான அறிவும் சந்தோஷமும் அவர்களுக்குக் கிட்டவில்லை. சூழலை ரசிக்க நேரமில்லை. இன்று பிள்ளைகளிடம் உங்கள் பொழுதுபோக்கு என்னவென்று கேட்டால் அப்படியொன்றுமில்லை என்ற பதிலே கிடைக்கின்றது. அப்படிக் கிடைத்தாலும், வலைதளப் பாவனை, முகநூல் பாவனை, உறங்குவது, தொலைக்காட்சி பார்த்தல் போன்ற பதில்களே கிடைக்கின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சரியான கல்வியை கற்றுக் கொடுக்கவே விரும்புகின்றார்கள்.



> அம்பெய்துதல், துப்பாக்கியால் சுடுதல் என்பன இப்போதைய இளையவர்களுக்கு புதிய விளையாட்டுக்கள்தான். ஆனாலும் அவர்கள் அவற்றில் திளைத்து நிற்பது உடல், உள ஆரோக்கியத்துக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை வெளிப்படையாக சுட்டி நிற்கிறது.

(13ஆம் பக்கம் பார்க்க)

# இரு நாள்களுக்குள் தீர்வு வேண்டும் இல்லையேல் தொடர் போராட்டம்!

## கோட்டா அரசுக்கு 85 தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பாதுகாக்க முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு அரசு இரு நாள்களுக்குள் தீர்வை வழங்கவேண்டும். இல்லாவிடின் 85 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்துத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.**

**– இவ்வாறு துறைமுக ஊழியர் சங்கத்தின் பிரதான செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன எச்சரிக்கை விடுத்தார்.**

துறைமுக ஊழியர் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள போராட்டம் தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பாதுகாக்க அரசுடன் பேசுகளை முன்னெடுப்பது பயனற்றது. கிழக்கு முனையத்தைத் துறைமுக அதிகார சபை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ள பட்சத்தில் அரசு கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அதிக அக்கறை கொண்டுள்ளது.

கிழக்கு முனையத்தின் 49 வீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதில் எவ்வித மாற்றமும் கிடையாது என ஜனாதிபதி தொழிற்சங்கத்தினரிடம் தெளிவாகவும், உறுதியாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு முனையம் தொடர்பில் துறைமுகம் மற்றும் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட எழுவர் அடங்கிய குழுவின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. குழுவினர் அரசுக்குச் சார்பாகவே அறிக்கை சமர்ப் பிப்பார்கள்.

குழுவினர் எதிர்வரும் அமைச்சரவையில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர். பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியில் அரசின் செயற்பாட்டைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்ய வேண்டும் எனத் தொழிற்சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கையை மீளப்பெற்று, கொழும்புத் துறைமுகத்தின் மேல் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணியை இந்திய நிறுவனத்துக்கு வழங்குமாறு துறைமுக தொழிற்சங்கத்தினர் ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுக்க வேண்டும் என அரச தரப்பில் இருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை எம்மால் ஏற்க முடியாது.

கொழும்புத் துறைமுகம் தொடர்பில் துறைமுக தொழிற் சங்கத்தினர் முன் வைத்துள்ள கோரிக்கைகளுக்கு இரண்டு நாள்களுக்குள் தீர்வை அரசு வழங்க வேண்டும். இல்லாவிடின் 85 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து நாடு தழுவிய ரீதியில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் – என்றார்.

# குடியிருப்புக்குள் புகுந்த முதலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளத்தை யடுத்து வந்தாறுமூலை வாவியில் காணப் பட்ட சுமார் ஒன்பது அடி நீளமான முதலை கொம்மாதுறை பிரதான வீதியோரமுள்ள மனிதகுடியிருப்பு பிரதேசத்திற்குள் வந்துள்ளது.

இதனால் அப்பிரதேச மக்கள் அச்சமும் பரபரப்பும் அடைந்து வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்தனர்.

வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு விரைந்து வருகைதந்து பெரும் பிரயத்தனத்துடன் அந்த முதலையைப் பிடித்து மண்முனை வாவியில் விட்டனர். ஏறாவூர்ப் பொலிஸாரும் அங்கு பிரசன்னமாயிருந்தமை யௌ அவதானிக்கமுடிந்தது.

# விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க இறுதிப்போரில் உதவியது இந்தியா

## பழையதை நினைவுகூர்ந்தார் லலித்



இந்தியாவுடனான நெருங்கிய உறவு இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க உதவியது என இலங்கையால் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்று இந்தியாவுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது இந்த விடயத்தை நினைவு கூர்ந்தார்.

அத்துடன், இரு தரப்பினரும் (இந்தியா - இலங்கை) ஒரே பக்கத்தில் இருப்பதை விவாதங்கள் உறுதி செய்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெல்ல முடியாது என்று எல்லோரும் கூறிய போரை வெல்ல இந்தியா தங்களுக்கு உதவியது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, கொரோனா வைரஸுக்கு எதிரான போரை வெல்லவும் இலங்கைக்கு இந்தியா இப்போது உதவுகின்றது எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியாவிடமிருந்து இலங்கை கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவதற்குப் பெரிய அளவில் உதவினார் எனவும் லலித் வீரதுங்க மேலும் தெரிவித்தார்.

## கொழும்புத் துறைமுக கிழக்கு முனைய விவகாரம்:

# நாடு பூராகவும் போராட்டம் நடத்த ஜே.வி.பியும் அதிரடித் தீர்மானம்

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிராக நாடு பூராகவும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தீர்மானித்துள்ளது.

தமது போராட்டத்தின் ஆரம்பகட்டமாக எதிர்வரும் முதலாம் திகதி தமது தொழிற் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து நாடு பூராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளங்களையும், சொத்துக்களையும் வெளிநாடுகளுக்கு விற்பதற்கு அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது எனவும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கும் அரசின் முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கு அனைத்து வழிகளிலும் நடவடிக்கை எடுப்போம் எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுகம் என்பது இலங்கை பொருளாதாரத்தின் இதயத்தை போன்றது. ஏற்கனவே இந்தத் துறைமுகத்தின் சில பகுதிகள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், எஞ்சியுள்ள கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தையிட்டியில் பௌத்த விகாரை

## அடிக்கல் நாட்டினார் இராணுவத் தளபதி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு தையிட்டியில் தனியார் காணியில் பௌத்த விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று சமய வழிபாடுகளுடன் நடைபெற்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், விகாரைக்கான நிரந்தக் கட்டடம் அமைக்க இடைக்காலத் தடை விதித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்க இன்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தையிட்டி பெண்கள் காவலரணுக்கு அருகாமையில் இந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்படவுள்ளது.

# ஐ.நா. மனித உரிமை ஆணையருடன் இறுதி நேரத்தில் இலங்கை பேசுமாம்

## வெளிவிவகார அமைச்சு வட்டாரத்திலிருந்து தகவல்

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் கடைசி நிமிடப் பேச்சில் இலங்கை ஈடுபடும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட், வெளியிட்டுள்ள மோசமான அறிக்கை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாங்கள் மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் அலுவலகத்துடன் சில விவாதங்களை நடத்தி வருகின்றோம். மேலும் அவர் எழுப்பிய விடயங்களில் ஒருவித உடன்பாட்டை எட்ட முயற்சிக்கிறோம் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

BRENS Reborn Signature MINSTER
FASHION PLANET
Mens & Womens Wears
Our Special Ladies all Dress Stitching (Tailoring) & Wedding Saree Blouse Arriworks
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண், பெண் இருபாலருக்குமான நவநாகரீகமான ஆடைகளை பெற்றுக்கொள்ள முடியும். பெண்களுக்கான ஆடைகள் மற்றும் திருமணம், பூப்புனித நீராட்டு, வைபவங்களுக்கான சாறி பிளவுஸ் (ஆரிவேர்க்ஸ்) செய்து தரப்படும்.
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb:Brens Fashion Planet
Email:brensfashionplanet@gmail.com
076 610 9770, 077 332 1937, 021 221 2777

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1991.11.10 | பிறந்த திகதி - 1987.03.18 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - மூலம் | நட்சத்திரம் - சித்திரை 01 |
| சூ/செவ் - 6 இல் | செவ் - 2இல் |
| பாவம் - 11 3/4 | பாவம் - 27 1/2 |
| கல்வி - MBBS | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - விரிவுரையாளர் | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - பட்டதாரி அளகான பெண் | எதிர்பார்ப்பு - கனடா வர மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# மனிதனுக்கு ஏன் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்து கொண்டே இருக்கிறது?



ப்ரியமதா பயஸ்

மனிதனின் மூளைக்கு இறைவன் எழுதிய அழகான மென்பொருள்தான் பிரச்சினை. பிரச்சினை இல்லாவிட்டால் மனிதனுக்கு வாழ்வே இல்லை. இதற்கு அழகான ஒரு ஒரு ஜப்பானிய கதை சொல்வார்கள். இது குளிர்சாதனப் பெட்டி இல்லாத காலத்து கதை. கடலில் மிக நீண்ட தூரம் சென்று மீன் பிடித்து வந்தால் அங்கே பிடித்தமான மீன் வகைகள் நிறைய இருக்கும் என்று அந்த மீனவர்கள் அறிந்து கொண்டனர். பல மணி நேரம் படகில் பயணித்து நடுக் கடல் சென்று மிக அதிக அளவு மீன்களை மீனவர்கள் பிடித்தனர்.

பல நாள்கள் தங்கியிருந்து அதிகமான மீன்களை பிடித்து கொண்டு கரைக்கு வந்தால் அவர்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. பல மீன்கள் இறந்து இருந்தன. உலர்ந்திருந்தன. நாற்றம் பிடித்தன. எனவே படகில் செயற்கை நீர் தேக்கம் உண்டாக்கி பிடிபட்ட மீன்களை அதில் இட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

இந்த முறையில் சிறிய வெற்றி கிடைத்திருந்தது. மீன்கள் சாகவில்லை. எனினும் முழு வெற்றி இல்லை.

கரைக்கு கொண்டு வரப்படும் மீன்கள் சோர்ந்திருந்தன. எனவே வழக்கமான சுவை இல்லை. இதனால் விற்பனையிலும் தேக்க நிலை. எல்லையற்ற கடல் நீரில் நீந்தி களித்திருந்த மீன்களுக்கு, நான்கு பக்கமும் எல்லை உள்ள சிறிய நீர்த்தொட்டியில் உயிர் வாழ்வது மிகப்பெரிய அலுப்பை ஏற்படுத்தி இருந்தன.

இந்த நிலையில், அவர்களில் ஒரு புத்திசாலி மீனவன் ஒரு வழியைக் கண்டுபிடித்தான். மீன்கள் அடைபட்டிருந்த நீர் தேக்கத்தில் ஒரு குட்டி சுறாவையும் இட்டு வைத்தான்.

அப்புறம் என்ன? சுறா மீனிடமிருந்து உயிர்பிழைக்க மற்ற மீன்கள் எப்போதும் ஓடிக்கொண்டே இருந்தன.

பிழைப்பு என்பது அதன் வாழ்வின் அர்த்தம் ஆனது. எப்போதும் விழிப்பாக இருந்ததால் கரைக்கு கொண்டு வரும் வரை அதன் சுவையும் குறையவில்லை. நம் வாழ்வும் அப்படித்தான். பிரச்சினைதான் வலிமை. பிரச்சினைதான் உயிர். நமக்கு விருப்பமானது எல்லாம் நம் படுக்கைக்கு அருகில் வந்தால் நாம் சீக்கிரமே இறந்து விடுவோம். நம் இரத்த ஓட்டம் நின்று விடும். நம் உடலில் பல உறுப்புகள் இயங்காமல் செயல் இழந்துவிடும்

நடந்து பழக்கப்பட்டவனுக்கு ஒரு நாய் துரத்தினால் தான் எப்படி ஓடுவான் என்று தெரியும். புலி துரத்தினால்? அந்த ஓட்டத்தில் முள் குத்தினால் கவலைப்படுவோமா? ஆணி குத்தினால் ஓட்டத்தை நிறுத்துவோமா?

புலி துரத்தும்போது எதிரே ஒரு சுவர் இருந்தால்? அப்படி ஒரு சுவரில் ஏணி இல்லாமல் ஏறவே முடியாது என்று முன்தினம் வரை நம்பிய நாம், அன்று புலி துரத்தும்போது எந்த கருவியும் இன்றி ஏறி இருப்போம்.

சின்ன பிரச்சினை சின்ன நாய். பெரிய பிரச்சினை புலி. அவை துரத்தும்போதுதான் நாம் பலம் பெறுவோம். பசி என்ற பிரச்சினை வந்தபோதுதான் முதல் மனிதன் அப்பிளை கடித்தான். மிருகங்கள் தன்னை தாக்க வரும் போதுதான் வேட்டைக்கான கருவிகளை உண்டாக்கினான். வெயில், மழை என்ற பிரச்சினைகளுக்குத்தான் வீடு ஒன்றை மனிதன் உண்டாக்கினான்.

அடங்கி ஒடுங்கி வீட்டில் இருங்கள் என்று அரசு நமக்கு உத்தரவிட்டபோது எப்படா வெளியே வருவோம் என்றுதான் காத்திருந்தோம்.

வெளியே அவ்வளவு பிரச்சினை என்று தினம் தினம் போராடிக்கொண்டிருந்த நமக்கு வீட்டில் இருப்பது அதை விட பெரிய பிரச்சினை என்பது பிறகுதான் தெரிந்தது.

எனவே, நம்மால் முடிந்தவரை முயற்சிப்போம். மீறி வந்தால், வருவது வரட்டும் ஊதித்தள்ளிடலாம் என்பதே நம் மன அமைப்பாக இருக்க வேண்டும்.



# சந்தோஷமாக வாழ்வதற்கான ரகசியம் என்ன?

1. இருப்பதைக் கொண்டு நிம்மதியாக வாழ வேண்டும். ஏனெனில், தேவைகளுக்கு முடிவென்பதே கிடையாது.

2. எப்போதும் ஒன்றை விட மற்றொன்று சிறந்ததாகவே தோன்றும். மனதைக் கட்டுப்படுத்த தெரிந்தால் வாழ்வில் நிம்மதி கிட்டும்.

3. இறந்த காலம் பற்றியோ, எதிர்காலம் பற்றியோ எண்ணி வருந்தாது, நிகழ்காலத்தை பயனுள்ளவாறு வாழ வேண்டும்.

4. நாம் என்றும் அடுத்தவர் போன்று வாழ எண்ணக் கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒரு குணாதிசயம் இருக்கும். நாம் மற்றவர் போல் வாழ எண்ணினால், நாம் நம் தன்மையை இழந்து விடுவோம். பிறகு வாழ்வில் துன்பமே மிஞ்சும்.

5. பொறாமை, வன்மம் முதலிய எண்ணங்கள் மனதை நெருங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

6. பணம், சொத்து அனைத்தும் நிலையற்றது. அன்பு ஒன்றே நிலையானது. முடிந்தவரையில் அனைவரிடத்திலும் அன்பு செலுத்துங்கள். எவ்வளவு பணிச்சுமை இருந்தாலும், பெற்றோரிடம் நேரம் செலவிடுவதை விட்டுக்கொடுக்காதீர்கள். உலகமே நம்மை எதிர்த்தாலும், நமக்காக உடனிருப்பவர்கள் பெற்றவர்கள்தான்.

7. பிறரிடம் நம் எதிர்ப்பார்ப்புகளைத் திணிக்கக் கூடாது. பின் நம் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறா விட்டால், வெறுப்பு உண்டாகும். ஒரு விடயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கண்ணோட்டம் இருக்கும். முதலில் அதை உணர வேண்டும். நாம் எண்ணுவதே சரி, அதையே அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று எண்ணக் கூடாது.

8. பொறுமை வேண்டும். கோபக்கனலால் பல இன்னல்கள் ஏற்படலாம். உறவுகள் கூட முறியலாம். ஆகையால், நிதானத்தோடு செயல்பட வேண்டும்.

9. நாம் கூறிய வார்த்தைகளைத் திரும்ப பெற இயலாது. ஆகையால், பேசுவதற்கு முன் ஓரிரு முறை யோசித்துப் பேச வேண்டும்

10. ஒரு செயலை செய்கையில் அவர் என்ன சொல்வார், உலகம் என்ன நினைக்கும் என்று எண்ணக்கூடாது. மனதிற்கு எது சரியென்று படுகிறதோ அதைச் செய்ய வேண்டும். அனைவரையும் நம்மால் திருப்திபடுத்த இயலாது. தந்தை, மகன், கழுதை கதை அனைவரும் அறிந்ததே. அது மாதிரி தான். சில நேரங்களில், நாம் நல்லதே செய்தாலும் அதை குறை சொல்லுகிறவர்கள் இருக்கத்தான் செய்வர். நம்மிடம் தவறு இருந்தால், முழு மனதோடு திருத்திக் கொள்ளலாம். இல்லையெனில், பெரிதுபடுத்த தேவையில்லை.

# பொய் சொல்வது கூடாத பழக்கமா?

என்னதான் எல்லோரும் உண்மையே பேசணும் என்று நினைத்தாலும் வாழ்க்கை எம்மை அப்படி இருக்கவிடாது. சில நேரங்களில் எம்மை நேசிப்பவர்களை சந்தோசப்படுத்த கொஞ்சம் பொய் சொல்லவேண்டிய தேவை கூட இருக்கின்றதுதான்.

‘உனக்கென்னடா குறை? நீ ஹீரோ மாதிரி இருக்கிறாய்’ - என்று எல்லா அம்மாவும் தன் மகனிடம் சொல்லுவார்கள். இதுகூட எவ்வளவு இனிமையான பொய்...!

பிள்ளைக்கு சோறு ஊட்டும் போது இதுதான் கடைசி வாய் என்று சொல்லுவார்கள். ஆனால் அது முடிவில்ல ஆரம்பம்தான். பாவம் குழந்தைக்கு தெரியாது.

வெளியூரில் வேலை செய்யும் நாம் விடுமுறைக்கு ஊருக்கு போவோம். அம்மா எங்களைப் பார்த்த உடனே ‘என்னடா மெலிஞ்சு போய்விட்டாய்?’ என்று சொல்லுவார். ஆனால் நாம் ஒரு சுத்து கூடியிருப்போம்!

‘மச்சான் அந்தப் பொண்ணு உன்னத் தாண்டா பாக்குறாள்.’ பலரின் வாழ்வை நாசமாக்கிய இனிய பொய் இதுவாகவும் இருக்கும்.

எமது வாழ்க்கையில் பிரச்சினை எம்மை போட்டு புரட்டி எடுத்துக்கொண்டிருக்கும். ஆனாலும் யாராவது எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் ‘நல்லா இருக்கிறேன்’ என்று சிரித்துக் கொண்டே சொல்லி விடுவோம்.

இந்த மாதிரி பொய்களும் வாழ்க்கையை அழகுபடுத்தத்தான் செய்கின்றன.



# இறைவன் வலுவற்றவர்களைத் தேர்ந்தெடுத்து தனது பெரிய பணிகளை ஆற்ற அருள்கின்றார்

## இறையடியார் தோமஸ் அடிகளார் அதற்கு நல்ல உதாரணம் புனிதப்பட்ட ஊக்குவிப்பாளர் ஸ்ரிபன் அடிகளார் கருத்து



தவத்திரு தோமஸ் அடிகளார் குறித்து புனிதப்பட்ட ஊக்குவிப்பாளர் அ.ம.ஸ்ரிபன் செபமாலைதாசர்.அடிகளார் கூறும் கருத்தைப் பார்ப்போம்:–

தவத்திரு தோமஸ் அடிகளார் பிறந்ததிலிருந்தே நோயாளியாகவும் மெலிந்த உருவமும் சக்தியற்ற உடற் தோற்றமும் கொண்டவராக விளங்கினார்.

1912ஆம் ஆண்டு அன்றைய ஆயர் மேதகு கென்றி யூலன் ஆண்டகையால் குருவாக யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார். அன்றைய நாள்களில் அவரின் உடல் நிலையை அறிந்த ஆயரும் அமலமரித் தியாகிகள் சபையின் தலைவர்களும் தோமஸ் அடிகள் ஒருசில ஆண்டுகளில் இறந்து விடுவார் என்றே நம்பியிருந்தனர். ஆனால் இறைவன் வலுவற்றவர்களைத்தான் தேர்ந்தெடுத்து தனது பெரிய பணிகளை ஆற்ற அருள்கின்றார் என்பதற்கமைய தோமஸ் அடிகளார் பல மேலான பணிகளை ஆற்றி 78 வயது வரை வாழ்ந்து 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

இவர் மற்றைய பலரும் ஆற்றமுடியாத மேலான பணிகளை ஆற்றினார். அதில் முக்கியமானதுதான் ஆசியாவிலேயே ஆண்களுக்கான முதல் தியானயோக துறவுசபையை நிறுவியதாகும். இத்தகைய பணியைப் பற்றி அமலமரித் தியாகிகள் துறவு சபையின் அன்றைய உயர் தலைவர் 1937ஆம் ஆண்டில் உரோமை நகரில் இருந்து வருகை தந்து தோமஸ் அடிகளாரின் பணிகளைப் பார்த்து அமலமரித் தியாகிகள் சபையினரான இவர் இலங்கை நாட்டில் ஆற்றியது மிகவும் சிறந்த பணியாகும் என்று கூறியுள்ளார்.

1912ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றதுமே தோமஸ் அடிகளார் சில காலமே உயிர்வாழ்வார் என்ற நிலையில் புனித பத்திரிசியார் கல்லூரியிலேயே தங்கி ஓய்வெடுக்கும்படி ஆயர் பணித்தார். இந்நாள்களில் தந்தை தோமஸ் அடிகளார் பிற்காலத்தில் தான் ஆற்றவேண்டியிருந்த சிறப்பான பணிக்கு இறைவனால் தயாரிக்கப்பட்டார் என்றே கூறவேண்டும். தந்தை தோமஸ் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியில் 1912ஆம் ஆண்டிலிருந்து 1928ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலரும் இவரின் அர்ப்பணம் மிகுந்த ஆசிரியப் பணிபற்றி புகழ்ந்துரைத்துள்ளனர்.

கொழும்பு மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயரும் கருதினாலுமான மேதகு தோமஸ் கார்டினால் கூறே அ.ம.தி. ஆண்டகை தோமஸ் அடிகளாரின் மாணவராக திகழ்ந்தவர். அவர் தந்தை தோமஸ் அடிகளார் பற்றிக் கூறும்போது இவர் ஆசிரியராக புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்றிய காலமே பின்பு இந்த தியானயோக துறவு சபையை நிறுவும் பணிக்கு இவரைத் தயாரித்தது. அவர் கற்பித்த புதியேற்பாடு மற்றும் தமிழ் போன்ற பாடங்கள் அவருக்கு அர்ப்பணமான அன்பின் பணியாகவே திகழ்ந்தன. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வை மையமாகக் கொண்டு அவர்கள் உலகின் உண்மையைக் கண்டறிந்து சிறப்பான மனிதர்களாகத் திகழவேண்டும் என்ற நோக்கோடு தனது பாடங்களை உண்மைத் தத்துவங்களோடு கற்பித்தார் – என்றார்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் 1887ஆம் ஆண்டில் இருந்து கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவர்களுக்கான தங்கும் விடுதி செயற்பட்டு வந்தது. அன்றைய காலத்தில் யாழ் மாவட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரி மிகவும் சிறந்த ஆங்கிலக் கல்லூரியாக திகழ்ந்தது. எனவே சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் வாழ்ந்தவர்களும் செல்வந்தர்களும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தங்கள் தங்கள் பிள்ளைகள் புனித பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி கற்பதையே விரும்பினார்கள்.

எனவே பின்னர் கத்தோலிக்கர் அல்லாத மாணவர்களுக்கென 1907ஆம் ஆண்டில் தங்கும் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. தந்தை தோமஸ் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியில் பணியாற்ற ஆரம்பித்த காலத்தில் அதிபர் அவர்கள் தோமஸ் அடிகளாரை இந்து மாணவர் விடுதிக்கு உப அதிபராக நியமித்தமையோடு அவர் மிகவும் சிறந்த பணியை அங்கும் ஆற்றியதால் ஓர் ஆண்டிற்குப் பிற்பாடு இவரை இந்த விடுதிக்கு பொறுப்பான அதிபராக ஏற்படுத்தினார். இவரின் பணி அங்கும் மிகவும் சிறந்து விளங்கியது. அன்போடும் தாழ்மையோடும் தம் பணியை அந்த இந்து மாணவர்களுக்கு வழங்கினார். எல்லோரும் ஒரே இறைவனின் மக்கள் என்ற உண்மைக் கோட்பாட்டோடு தனது பணியை ஆற்றினார். எனவே இந்து மாணவரும் அவர்களின் பெற்றோரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். படிப்பு மட்டுமன்றி வாழ்வின் பண்புகளையும், நல்ல பழக்க வழக்கங்களையும் தந்தை தோமஸ் அடிகளார் தனது நாளாந்த வாழ்வினாலேயே கற்பிக்கின்றார் என்று பெருமை கொண்டனர். அத்துடன் அவரை யோகி – புனிதமான மனிதன் – மகாத்மா என்று ஏற்று மகிழ்ந்தனர். இவரின் நல்வாழ்வும் தியான நிலைகளும் இந்து மாணவரின் வாழ்விலும் ஒரு புது மறுமலர்ச்சியைக் கொடுத்தது என்பதில் ஐயமில்லை.

காலைக்கதிர் Kalaikathir

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## செபத்தினால் எதையும் சாதிக்கலாம் என்பதில் மிக நம்பிக்கை உடையவர் தோமஸ் அடிகளார்

### செபமாலைத்தாசர் சபை மாகாண முதல்வர் கருத்து



இலங்கை நாட்டில் யாழ் மண்ணில் பிறந்து வளர்ந்து இறை பணியாற்றி இறந்த ஒருவருக்கு புனிதர் பட்ட ஆய்வுகள் உரோமாபுரியில் நடைபெறுகின்றன என்றால் அது இறைவனுடைய ஒரு பெரிய கொடையாகும். நாம் அனைவரும் இறையடியார் தவத்திரு பீ.ஏ. தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதர் பட்டம் விரைவில் கிடைக்க செபிக்க வேண்டும்.

இலங்கை செபமாலைத்தாசர் சபை மாகாண முதல்வர் அ. பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1926ஆம் ஆண்டில் அன்றைய திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் திருச்சபையின் வழிபாட்டுப் பணியில் தியான மார்க்கத்தைப் புகுத்தும்படி ஆயர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்த பின்னர் இப்பணி ஆயரால் தோமஸ் அடிகளாரிடம் வழங்கப்பட்டது. அதற்கமைய பலாலிக்கு அருகே உள்ள வசாவிளானில் தோலகட்டி என்னும் இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த புனித அந்தோனியார் ஆலயத்தில் 02 பெப்ரவரி 1928இல் ஓர் ஆச்சிரமம் தொடங்கப்பட்டது.

செபத்தினால் எதையும் சாதிக்கலாம் என்பதில் நம்பிக்கை உடைய தோமஸ் அடிகளார், அங்கு சில துறவிகளுடன் தவ வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தார். இரவு பகலாக இடைவிடாது செபிக்க ஒழுங்கு செய்தார். துறவியர் மௌன விரதத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். தோமஸ் அடிகளாரின் அயராத உழைப்பினால் இன்று இச்சபையினர் ஆண்களுக்கு 25 ஆச்சிரமங்கள் இலங்கை, இந்தியா, கனடாவிலும் பெண்களுக்கு 17 கன்னியர் மடங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ளன. இவர் விரைவில் புனிதராக இறை வேண்டுதல் செய்வோம். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இறையடியார் தோமஸ் அடிகளார் விரைவில் புனிதராக இறை வேண்டுதலைச் செய்வோம்

### புனிதப்பட்ட ஊக்குவிப்பாளர் அ.ம.ஸ்ரிபன் அடிகளார் வேண்டுகை



இறையடியார் தவத்திரு பீ.ஏ.தோமஸ் அ.ம.தி. அடிகளார் விரைவில் புனிதராக வரவேண்டும் என்பது தொடர்பில் அ.ம.ஸ்ரிபன் அடிகளார் விடுக்கும் வேண்டுகோள் வருமாறு:–

இறையடியார் தவத்திரு பீ.ஏ.தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கு தேவையான புதுமைகள் நடைபெற்று அவர் திருச்சபையில் விரைவில் புனிதராக வரவேண்டும் என எமது செபங்களில் இறை வேண்டுதல் செய்வோம் என தோமஸ் அடிகளாரின் புனிதப்பட்ட ஊக்குவிப்பாளர் அ.ம.ஸ்ரிபன் செ.தா.அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

செபமாலைத்தாசர் மற்றும் செபமாலைக் கன்னியர் தியானயோக துறவு சபைகளின் நிறுவுனராகிய இறையடியார் தவத்திரு பீ.ஏ. தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் குருத்துவ திருநிலைப் படுத்தலின் 109 ஆவது ஆண்டு நிறைவை 06 ஜனவரி 2021 அன்றும், அவரது விண்ணகப் பிறப்பு விழாவின் 57 ஆவது ஆண்டு நிறைவை 26 ஜனவரி 2021 அன்றும், அவர் செபமாலைத் தாசர் துறவு சபையை நிறுவியதன் 93 ஆவது நிறைவை 02 ஜனவரி 2021 அன்றும் நினைவுகூர்ந்தோம்.

இறையடியார் தவத்திரு பீ.ஏ. தோமஸ் அ.ம.தி. அடிகளாரின் இவ்வுலக 78 ஆண்டு கால வாழ்வு உண்மையிலேயே இறைவனுடைய மேலான செயற்பாடாக அமைந்தது என்பதை அவரின் வாழ்வைப்பற்றி அறிந்த அனைவருமே எற்றுக்கொள்வார்கள்.

பிறக்கும் போதே மூச்சுவிட முடியாமல் திணறிய குழந்தையாக இருந்து இறந்து விடுவாரோ என்று பயந்த பெற்றோர் அவர் பிறந்த அதே நாளாகிய 07 மார்ச் 1886ஆம் நாளிலேயே யாழ் புனித மரியன்னை பேராலய பங்குத்தந்தையை வீட்டிற்கு அழைத்து அவருக்குத் திருமுழுக்கு வழங்கி அவரை இறைவனுடைய பிள்ளை ஆக்கினர்.

இறைவனுடைய கரம் தோமஸ் அடிகளாரின் வாழ்விலும் பணியிலும் செயலாற்றி 78 ஆண்டுகள் பணியாற்றச் செய்தது. அவரின் வாழ்வு உண்மையிலேயே புனிதம் நிறைந்ததாக இருந்தது என்பதை யாழ் மறை மாவட்ட ஆயர்களும் இலங்கை நாட்டின் அனைத்து ஆயர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே அவரின் புனிதர் பட்டத்திற்கான முயற்சிகள் யாழ் மறைமாவட்டத்திலும் இலங்கை நாட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வத்திக்கான் நாட்டில் உள்ள புனிதப்பட்ட தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவரின் சிறப்பான வீர புண்ணியங்களும் ஆராயப்பட்டு அவை பற்றிய ஆய்வுகள் வத்திக்கான் நாட்டில் நடைபெற்றுவருகின்றன. அவர் விரைவில் புனிதராக இறை வேண்டுதல் செய்வோம்.– என்று உள்ளது.

# வீரசேகரவின் கட்டாய இராணுவப் பயிற்சி வரவேற்கின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.!

## வடக்கு கிழக்கு மாணவ, மாணவியருக்கு தமிழில் வழங்கவேண்டுமென நிபந்தனை



18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி என்று அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்தை நான் வரவேற்கின்றேன். எமது வடக்கு, கிழக்கு மாணவ, மாணவியர் 16 வயதிலிருந்து இராணுவப் பயிற்சி பெறவேண்டும். அவர்களுக்கு பயிற்சிகள் தமிழ் மொழியில் வழங்கப்படவேண்டும். முன்னாள் போராளிகளுக்கு அரசு சம்பளத்தை வழங்கி பயிற்சியாளர்கள் ஆக்கலாம். அல்லது இந்தியாவில் இருந்து தமிழ்பேசும் பயிற்சியாளர்களை அழைக்கலாம்.

– இவ்வாறு சரத் வீரசேகரவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்புகின்ற வாராந்த கேள்வி பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

**கேள்வி:-** வைஸ் அட்மிரல் சரத் வீரசேகர இலங்கையில் கட்டாயமாக 18 வயதுக்கு மேற்பட்டோர் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருக்கின்றாரே. அது சம்பந்தமான உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** வடகிழக்குதமிழர்களைப்பொறுத்தவரையில் நான் அந்தக் கருத்தை வரவேற்கின்றேன். ஆனால், 16 வயதிலிருந்து எமது சகல மாணவ, மாணவியரும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும். அவர்களுக்கு தமிழ்ப் பேசும் அலுவலர்களே பயிற்சி கொடுக்க வேண்டும். ஆணைகள் தமிழிலேயே இருக்க வேண்டும். போதிய தமிழ் பேசும் அலுவலர்கள் இராணுவத்தில் இல்லை என்றால் முன்னாள் தமிழ் போராளிகளுக்கு இந்தப் பணியை செய்யச் சொல்லி அவர்களுக்கு ஊதியமும் வழங்கலாம். எந்த விதத்திலும் சிங்களம் பேசுவோரோ சிங்கள மொழியிலோ எமது மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கப்படக் கூடாது. பயிற்சியாளர்களுக்குத் தட்டுப்பாடு இருந்தால் தென்னிந்தியாவில் இருந்து தமிழ்ப் பயிற்சியாளர்களை வரவழைக்கலாம்.

எங்களுக்கு சிரேஷ்ட பள்ளி மாணவ இராணுவப் பயிற்சி (Senior Cadetting) 1950களில் றோயல் கல்லூரியில் வழங்கும் போது பயிற்சிகளும் ஆணைகளும் ஆங்கிலத்தில் இருந்தன. பல் இன மாணவர்களை ஆங்கில மொழி ஒன்று சேர்த்தது. எம்முள் சிங்களவர், தமிழர், பறங்கியர், முஸ்லீம்கள், மலாயர், சீனர் என பலதரப்பட்ட மாணவர்கள் இருந்தார்கள்.

ஆனால், எப்பொழுது சிங்களத்தை நாடு முழுவதும் திணிக்க அரசியல்வாதிகள் முடிவெடுத்தார்களோ அப்பொழுதே எமது ஒற்றுமை, ஒன்றிணைந்த செயற்பாடு, நாட்டின் மீதிருந்த பற்றுதல் ஆகியன ஆட்டம் கண்டன. காலாதிகாலமாகத் தமிழ் மொழியைப் பேசி வந்த வடக்குக் கிழக்கும் தமது தனித்துவத்தை இழந்தன.

1958 ஆம் ஆண்டில் றோயல் கல்லூரியின் இராணுவப் பயிற்சி பெற்ற மாணவப் படையின் அங்கத்தவராக காலி மைதானத்தில் சுதந்திர தின அணி வகுப்பில் பங்குபற்றியதன் பின்னர் சுதந்திர தின வைபவங்களைப் புறக்கணித்தே வருகின்றேன். காரணம் 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பறித்து விட்டது. எமக்கு சிங்கள அரசியல்வாதிகளிடம் இருந்து விடுதலை கிடைத்து நாட்டு மக்கள் சம உரிமையுடன் ஒன்று சேர்ந்து வாழ வாய்ப்பளித்தால்தான் தமிழர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடலாம்.

சரத் வீரசேகர, தமிழ் மாணவ, மாணவியர் தமிழர்கள் மூலமாகத் தமிழ் இராணுவப் பயிற்சி பெற இணங்குவாரானால் நான் அவரின் கருத்தை வரவேற்பேன். சிங்கள மொழி பேசும் அலுவலர்களை அனுப்ப நினைத்தால் எமது மாணவ, மாணவியர் அல்லது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பயிற்சிகளைப் புறக்கணிப்பார்கள்.

இராணுவப் பயிற்சி சுய கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தும் என்பது உண்மைதான். ஆனால் இவ்வாறு பயிற்சி பெற்ற இலங்கையின் போர்ப் படையினரே கட்டுப்பாட்டை இழந்து ஒழுக்கத்தை மீறி மனித உரிமை மீறல்களிலும் இனப்படுகொலைகளிலும் ஈடுபட்டனர் என்பது உலகம் அறிந்த விடயம். சரத் வீரசேகர, எமது இளைஞர்கள் யுவதிகளைத் தமது இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவே இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதை நான் அறிவேன்.

சிங்கள அரசியல்வாதிகளும் படையினரும் இணைந்து எவ்வாறு வடக்குக் கிழக்கைத் தம்முடைய முற்றும் முழுதுமான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டும், இங்குள்ள குடிப்பரம்பலை எப்படி மாற்ற வேண்டும், பிரச்சினைகளை ஏற்படுத்தி எமது இளைஞர், யுவதிகளை நாட்டிலிருந்து எவ்வாறு வெளியேற்ற வேண்டும் என்பது சம்பந்தமாக ஆழ ஆராய்ந்து, முடிவுக்கு வந்து தமது முடிவுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். அதன் ஓர் அம்சமே குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்துரை. சிங்கள புத்திஜீவிகள் மற்றும் படையினரின் ஆழ்ந்த இன ரீதியான முடிவுகளை முறியடிக்க எமது புத்திஜீவிகள் இதுவரை என்ன செய்துள்ளார்கள்? குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தாவது எமது மக்கள் தலைவர்களை வரப்போகும் ஆபத்து பற்றி சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது. – என்றுள்ளது.

## பரிசுத்த பாப்பரசரின் இலங்கை பிரதிநிதி மன்னார் விஜயம்!





பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதிநிதி அருட்கலாநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை, மன்னார் மறைமாவட்டத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை, மன்னார் நகரை வந்தடைந்த பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதிநிதி அருட்கலாநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை, மன்னார் நகரப் பகுதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சொரூபத்தில் ஆசி பெற்றார்.

அதனைத் தொடர்ந்து மன்னாருக்கு வருகை தந்த பிரதிநிதியை, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் வரவேற்றனர்.

மன்னார் நகரப் பகுதியில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் வரை திறந்த வாகனத்தில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீட பிரதிநிதி மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் மறைமாவட்ட மக்கள் ஆகியோர் பவனியாக ஆலயம் நோக்கிச் சென்றனர். மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலி இடம்பெற்றதோடு நற்கருனை ஆசீர்வதமும் இடம்பெற்றது.

## சிறந்த பொழுது ....





(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே கல்வியிலுள்ள போட்டி காரணமாக பிள்ளைகளுக்கு ஓடிப் பாடி விளையாடுவதற்கு நேரமில்லை. பாடப் புத்தகங்களுக்கு அப்பால் புத்தகங்களை வாசிக்க வழியில்லை. எல்லாவற்றுக்கும் தீர்வாக வந்திருப்பதுதான் ஆரோக்கியம் தரும் சிறப்பிடமான நெய்தல் கடற்கரை நகர் .

சில திறமைசாலியான குழந்தைகள் தங்கள் பொழுதுபோக்கை அவர்களின் பிற்கால வளர்ச்சிக்கான முதல் படியாக மாற்றிக் கொள்கிறார்கள். விளையாட்டு, நடிப்பு அல்லது இசையைப் போலவே, ஒரு நல்ல திறமைமிக்க பொழுதுபோக்கும் உங்கள் குழந்தைகளை வாழ்க்கையில் பெரிய உயரத்திற்கு எடுத்துச் செல்லலாம். ஒரு பெற்றோராக உங்கள் குழந்தையின் சந்தோஷத்தை விட உங்களுக்கு பெரிய மகிழ்ச்சி வேறு எதுவும் இருக்க முடியது. அதுபோலவே பெரியவர்களான நீங்களும் சமநேரத்தில் மகிழ்வையும் உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாத்துக்கொள்ள பிள்ளைகள் விருப்பப்படும் பொழுது போக்குகளோடு அவர்களுக்கும் கற்றுக்கொடுத்து அவர்களின் முன்னேற்றத்தையும் சந்தோஷத்தையும் கண்டு மகிழ்ச்சி அடைவதோடு நீங்களும் மகிழ்வாய் இருக்கும் இடம் இது. ஆகையால், நெய்தல் கடற்கரை நகருக்கு ஒருமுறை செல்வதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

## திட்டமிட்ட பௌத்த மயமாக்கலைத் தடுக்க அவசரமாக கூடுகிறது இந்து சமயப் பேரவை!

திட்டமிட்ட பௌத்த மயமாக்கலைத் தடுப்பது குறித்து ஆராய அவசரமாக கூடுகிறது இந்து சமயப் பேரவை. இது தொடர்பில் இந்துசமயப் பேரவையின் யாழ். தலைவர் ஈசான சிவ.சக்திகிரீவன் தெரிவித்துள்ளவை வருமாறு.

அந்நியர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை பல்வேறு இந்து ஆலயங்கள் இந்த நாட்டில் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. எனினும் இதற்கான சுவடுகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. இது இவ்வாறிருக்க இதுவரை இவ்வாலயங்கள் புனரமைப்புச் செய்யப்படாது காணப்படுகின்றது.

காலத்திற்குக்காலம் வருகின்ற அரசுகள் பௌத்த விகாரைகளை அந்த இடங்களில் என்னபாடுபட்டும் ஸ்தாபிக்க பல்வேறு யுக்திகளைக் கையாண்டு வருகின்றன. இதன் ஓரங்கமே குருந்தூர் மலை விவகாரம். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எமது பேரவை நிர்வாகசபை தனது அலுவலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கூடி ஆராயவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகசபை உறுப்பினர்களைத் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்வதோடு, இந்த அநீதியை எதிர்க்க வேண்டும் என்றவுணர்வுபடைத்த சட்டத்தரணிகள், இந்துமத ஆர்வலர்கள், அபிமானிகள் ஆகியோரைத் தவறாது பங்கு கொண்டு பொருத்தமான ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு ஆராமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் எம்மோடு 0761688277 உடன்தொடர்பு கொண்டு தங்கள், வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நிகழ்வில் பங்கு கொள்வோர் தற்போதய சுகாதாரநடைமுறையைக் கடைப்பிடிப்பது அவசியமானதாகும். – என்று உள்ளது.

## காந்தியின் பிறந்த தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு!



மகாத்மா காந்தியின் 73வது சிராத்த தினம் நேற்று (சனிக்கிழமை) இலங்கையின் பல பாகங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. அந்தவகையில் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் சிராத்த தின நிகழ்வு, நேற்றுக் காலை நடைபெற்றது.

காந்திசேவா சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் பாரதிதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காந்தி பூங்காவிலுள்ள காந்தியின் உருவச்சிலைக்கு அருகில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது, மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது மகாத்மா காந்தியால் விரும்பி பாடப்படும் பஜனைப் பாடல் பாடப்பட்டது. அத்துடன் மகாத்மா காந்தியின் 73 ஆவது சிராத்த தினத்தை குறிக்கும் வகையில் 73 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார ஊழியர்களுக்கும் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.













**'நிப்போன் பெயின்ட்' நிறுவனத்தினரால் அண்மையில் வட மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.**

**5 ஆயிரம் ரூபா பெறுமதியாக இந்த உலர் உணவுப் பொருள்களை கள விற்பனை முகாமையாளர் (F.S.M) பிரமித்த, பிராந்திய முகாமையாளர் (R.S.M) பெருமாள், பிரதேச முகாமையாளர் (A.S.M) கோமஸ் றெய்ஸ் ஆகியோர் வழங்கி வைத்தனர்.**



## மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

**இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.** **தொ.பே. 077 197 1667 077 316 4796**

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1984.01.29 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 08 செவ் - 03 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1990.10.22 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 18 செவ் - 9 இல்
தகைமை - AL
தொழில் - சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் (யாழ்) தேவை.

பிறந்த திகதி -1986.05.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 1
கி.பா - 16 செவ் - 6 இல்
தகைமை - AERO Engineer தொழில் - U.S.A PR
எதிர்பார்ப்பு - U.S.A + Canada PR மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1980.12.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -ரேவதி
கி.பா - 50 செவ்/ சூரி - 07 இல்
தகைமை - AL Computer தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1992.01.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -பூரம்
கி.பா - 15 செவ் - 10 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor (1992 - 1996).

பிறந்த திகதி - 1983.08.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம் 3
கி.பா - 47 செவ்/சூரி - 03 இல்
தகைமை - Computer Science தொழில் - Italy PR
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் இலங்கை வந்து திருமணம் செய்வார்.

பிறந்த திகதி - 1994.05.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கார்த்திகை 3
கி.பா - 65 செவ் - 07 இல்
தகைமை - B.sc Software Engineer
தொழில் - Company Colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.06.26 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி 2
கி.பா - 50 செவ் - 06 இல்
தகைமை - AL தொழில் - Company
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகள் தேவை.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1993.10.16 மதம் - இந்து
ஜாதி -N பகுதி நட்சத்திரம் - சுவாதி 1
கி.பா - 51 செவ் -2 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை வெளிநாடு மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1995.12.06 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 43 செவ் - 10 இல்
தகைமை - B.B.A. (Management)
எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாடு, வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி - 1991.05.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 3
கி.பா - 25 செவ்/சூரி - 12 இல்
தகைமை - Banking
தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன்.

பிறந்த திகதி - 1995.04.24 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 24 செவ் - 03 இல்
தகைமை - B.com தொழில் - Company Jaffna
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை தனியார் PR.

பிறந்த திகதி - 1994.11.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 35 செவ் - 09 இல்
தகைமை - மிருக வைத்தியம் தொழில் - மிருக வைத்தியர்
எதிர்பார்ப்பு - விரிவுரையாளர் Doctor or Engineer மணமகள்.

பிறந்த திகதி - 1990.06.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 31 செவ் - 3 இல்
தகைமை - B.sc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Engineer B.com, BA அரச சேவை மணமகன், ஆசிரியர் விரும்பத்தக்கது.

பிறந்த திகதி - 1992.02.28 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூராடம் 2
செவ்- 02 இல் கி.பா - 60
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.04.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரம் 3
கி.பா - 15 செவ் - 09 இல்
தகைமை - B.com
தொழில் - Development Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**


**மனித உரிமைகள் தொடர்பில்**

## யு.என்.எச்.சி.ஆரின் குற்றத்துக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பும்!

### எதிர்க்கட்சி சாடல்

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயத்துக்கு தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல, இதுபோன்ற தவறான எண்ணங்களினால் இலங்கை அபாயத்தை எதிர்கொள்கிறது எனக் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தற்போதைய ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்பதை எடுத்து கூறியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். சர்வதேச ஊடகங்களில் இத்தகைய செய்திகள் வெளியாகின்றமையால் இலங்கை பொருளாதார வளர்ச்சியில், இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

## கொரோனாத் தடுப்பூசி மிகவும் திறன் மிக்கது!

### வைத்தியர் கேசவன் சான்று

இலங்கையில் தற்போது செலுத்தப்படுகின்ற கொரோனாத் தடுப்பூசி, திறன்மிக்க தடுப்பூசியாகும். அதனை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என தொற்று நோய் வைத்திய நிபுணர் வைத்தியர் கேசவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை முழுவதும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே வைத்தியர் கேசவன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இது ஒரு பாதுகாப்பான தடுப்பூசியாகும். ஆகையினால் பக்கவிளைவுகள் மிக மிகக் குறைவு. இது மிகவும் திறன்மிக்க தடுப்பூசியாகும்.

எனவே, பொதுமக்கள் அனைவரையும் தடுப்பூசியை போட்டுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுகின்றேன். நான் என்னை நேசிக்கின்றேன், எனது குடும்பத்தை நேசிக்கின்றேன், எனது சமூகத்தை நேசிக்கின்றேன், எனது நாட்டை நேசிக்கிறேன் அதனால் நான் தடுப்பூசி போடுகின்றேன். எனவே அனைவரும் இந்த தடுப்பூசியை போட்டுக் கொள்ள வேண்டும்.- என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# திருமலை நகரசபை உறுப்பினர் அடையாள உணவு ஒறுப்பில்!




திருகோணமலை, ஜன.31

திருகோணமலை நகர சபையின் கீழ் மீண்டும் திருகோணமலை மொத்த மீன் சந்தை கொண்டு வரப்படவேண்டும், அதன் வரிப்பணம் நகர சபைக்கே செலுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி. சிவகுமார் (சத்தியன்) கடந்த வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திருகோணமலைநகரசபையின்முன்அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

அந்த இடத்துக்கு திருகோணமலைநகரசபைத் தலைவர் நா. இராஜநாயகம், உப தலைவர் கா. கோகுல்ராஜ் ஆகியோர் காலை 9.20 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் நகரசபை உறுப்பினருடன், கலந்துரையாடினர். இதன் போது இந்த விடயம் சம்பந்தமாக தான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், போராட்டத்தை கைவிடும் படியும் நகர சபைத் தலைவர் உறுப்பினரிடம் உறுதிமொழி வழங்கி இருந்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமாக போராட்டத்தில் ஈடுபடும் உறுப்பினர் சத்தியன் கருத்து தெரிவிக்கையில் –

திருகோணமலை நகரம் பல்லின சமூகம் சேர்ந்து வாழும் பகுதியாகும் பலதரப்பட்ட அபிவிருத்திகளின் தேவைப்பாடு அதிகமாகவே உள்ளது. நகரசபையும் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டே அபிவிருத்திகளைச் செய்து வருகிறது.

உள்ளூராட்சி சட்டப்படி ஒரு நகரில் இருக்கும் சந்தைகள் அந்த நகர சபையின் கீழோ அல்லது பிரதேச சபையின் கீழோ செயற்பட வேண்டும், திருகோணமலை நகர மணிக் கூண்டு அருகே உள்ள அதிக வருமானம் ஈட்டும் மொத்த மீன் சந்தை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் கீழ் செயற்படுகின்றது, 2016 ஆண்டு வரை 40 வீதம் நகர சபைக்கு செலுத்தப்பட்ட வரி அதன்பின் கிடைக்கப்பெறவில்லை.

மீன் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள் கடற் தொழில் கூட்டுத்தாபனத்துக்கு வரிப்பணம் செலுத்துகின்றமையால் நகரசபைக்கு அந்த வரிப்பணம் கிடைப்பதில்லை. அது நகர அபிவிருத்தியை மந்தமடையச் செய்கிறது.

இந்தநிலை மாறவேண்டும் நியாயமான கோரிக்கையை அரசு நிறைவேற்றாத பட்சத்தில் அஹிம்சை வழியில் எமது போராட்டம் தொடரும், வரிப்பணம் செலுத்தாத மீன் சந்தை கழிவுகளை மக்களின் வரிப்பணத்தில் எவ்வாறு அகற்ற முடியும்.– என்றார்.

## கொவிட் ஆஸ்பத்திரி…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவணைப் பரீட்சையையே அவர்கள் இவ்வாறு எழுதி வருகின்றார்கள்.

இது தொடர்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.கெனடி கருத்துத் தெரிவிக்கையில் –

எமது பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளான அடையாளம் காணப்பட்டு, அவர்கள் அனைவரும் மட்டக்களப்பு பெரிய கல்லாறு பிரதேச வைத்தியசாலை கொவிட் – 19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இந்நிலையில் எமது மாணவர்களுக்குரிய பரீட்சைகள் 29, 30, 31, ஆகிய 3 நாள்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கொவிட் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்குரிய நடவடிக்கைகளை இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் எடுக்கவில்லை.

ஆனால் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடம் எமது பல்கலைக் கழகத்தின் உப வேந்தரின் அனுமதியுடன் துணிந்து செயற்பட்டு, சகல வைத்திய நெறிமுறைகளையும், பின்பற்றி, பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலையில் இருந்தவாறே பரீட்சைக்குரிய மண்டப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு எமது 4 மாணவர்களும் தற்போது பரீட்சை எழுதி வருகின்றார்கள்.

மேலும் ஒரே நேரத்திலும் கிழக்குப் பல்கலைக்கழத்திலும், பெரியகல்லாறு வைத்தியசாலையிலும் எமது மாணவர்கள் பரீட்சையை எழுதி வருகின்றனர். 3 நாள்களும் காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணிவரையில் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இதற்குரிய சகல ஒழுங்குகளையும் சுகாதாரத்துறையினர் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அதனை நாங்கள் சி.சி. ரிவி கமரா மூலம் கண்காணித்து வருகின்றோம். – என்றார்.

## தீர்வு இல்லாத…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை விரைவில் கூட்டுவது என இன்று (நேற்று) நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எமது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அழுத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். அவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பேசியிருக்கின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் நில அபகரிப்பு வேறு வேறு போர்வைகளின் கீழ் நடைபெறுகின்றது. தொல்லியல் திணைக்களம் மிக மோசமாக கிழக்கு மாகாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு பகுதிகளிலும் செயற்படுகின்றது. மகாவலி சட்டம், வன இலாகா என பல்வேறு சட்டங் களைப் பயன்படுத்தி எமது மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

தொல்லியல் திணைக்களம் மக்களின் வழிபாட்டு தலங்களை மாற்றி அமைக்கும் மோசமான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. வவுனியா வெடுக்குநாறி மலை, முல்லைத்தீவு குருந்தூர் மலை போன்றவற்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யத் தயாராகி வருகின்றோம்.

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரில் எழுத்தாணை மனுத்தாக்கல் செய்துள்ளோம்.

யாழ்ப்பாணத்திலும் மோசமான நில அபகரிப்பு இடம்பெறுகின்றது. தொல்லியல் திணைக்களம் சில இடங்களை அடை யாளப்படுத்தி ஏற்கனவே ஆராய்ச்சி என வேலைகளைத் தொடங்கியுள்ளது. இதைத் தடுப்பதற்காகத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி ஆராய்ந்துள்ளன.

வடக்கு – கிழக்கு சிவில் அமைப்புக்கள் இந்த விடயங்களையும், அரசியல் கைதிகளின் விடயம், காணாமல் ஆக்கப்பட்டோருடைய விடயம், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் ஜனாஸா எரிப்பு விவகாரம், மலையகத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா பிரச்சினை எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் எதிர்வரும் 6ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. இதற்கு எங்களது கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்குப் பல்வேறு சிவில் அமைப்புக்களும், சமய அமைப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ளன. அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. இப்படியான சம்பவங்கள் நடைபெறுகின்றபோது மக்களுக்குத் தலைமைத்துவம் கொடுக்க வேண்டும். எனவே , அனைவரும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாகக் கேட்டு நிற்கின்றோம்.

இவற்றுக்கும் அப்பால் விரைவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் தொடர்பாகவும், அதற்கு 3 கட்சிகள் இணைந்து அனுப்பிய கடிதம் சம் மந்தமாகவும் கலந்துரையாடினோம். இந்த ஒற்றுமை மிகவும் அவசியமா னது. இதுவரை காலம் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும் மக்கள் தெரிவு செய்தார்கள். ஆனால், இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற அடிப்படையில் வேறு இரு கட்சிக ளையும் மக்கள் தெரிவு செய்துள்ளார் கள். இதனால் நாம் மூன்று கட்சிகளும் இணைந்து ஒரே நிலைப்பாட்டில் எங்க ளுடைய விண்ணப்பத்தை 47 உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பியுள்ளோம். தொடர்ந்து அதை நடைமுறைப்படுத் துவதற்கு அங்கே நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் தொடர்பாக நாங்கள் ஆராய்ந்துள்ளோம்.

மேலும், இந்த அரசு புதிய அரசமைப்பை உருவாக்கப் போவதாக ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளார்கள். அதற்குக் கூட்டமைப்பு சார்பான யோசனைகளைக் கடந்த டிசம்பர் மாதம் மிகவும் விபரமாக அனுப்பி வைத்துள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குக் கட்டாயம் தீர்வு காணப்பட வேண்டும். அது இல்லையேல் அந்த அரசமைப்பு எந்தவித பிரயோசனமும் அற்றது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளோம்.

ஜெனிவா தொடர்பில் தற்போது நிறுவப்பட்டுள்ள ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழுவால் எந்தவித பிரயோசனமும் கிடையாது. அது ஒரு கேலிக் கூத்து. ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பரிசீலிக்க இன்னொரு ஆணைக் குழுவா? இது ஒரு கண்துடைப்பு நாடகம். சர்வதேசத்தை முட்டாளாக்கும் முயற்சி. இந்த ஆணைக்குழுவால் எமக்கு எந்தவித நம்பிக்கையும் கிடையாது. இப்படியான செயற்பாடுகளைக் கைவிட்டு அரசு செயற்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தினாலே முன்னேறலாம். இந்த ஆணைக்குழுவுடன் இணைந்து உடலகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு சிபார்சுகள் என அவர்களுடைய சொந்த ஆணைக் குழுக்களின் சிபார்சுகள் இருக்கும் போது அவற்றை ஆராய இன்னொரு ஆணைக்குழு தேவையில்லை. இதனை ஐக்கிய நாடுகள் சபை நிராகரிக்கும் என நாம் நம்புகின்றோம்.

இலங்கையின் சுதந்திர தினத்தை நாங்கள் அனுஷ்டிப்பதில்லை. அதைப் புறக்கணித்து வந்துள்ளோம். கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் அந்த அரசு சிறிய நல்லெண்ண சமிஞ்ஞைகளைக் காட்டியபோது எமது நல்லிணக்கத்தைக் காட்ட நானும், சம்பந்தன் ஐயாவும் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொண்டோம். அந்த அரசின் காலத்தில் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து செயற்பட்டபோது நாங்கள் தொடர்ந்தும் புறக்கணித்தோம். ஆகவே, இம்முறையும் சுதந்திர தின நிகழ்வை நாம் புறக்கணிப்போம் – என்றார். (100)

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

சொர்க்கம் திருமண சேவை

மணமகன் விபரம்

பிறந்த திகதி – 1985.05.02 மதம் – இந்து
ஜாதி – வேளாளர் நட்சத்திரம் – உத்தரம்
செவ் – 2 இல்
தொழில் – Fire Alarm Technician Canada
எதிர்பார்ப்பு – இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி – 1989.07.09 மதம் – இந்து
ஜாதி – வேளாளர் நட்சத்திரம் – உத்தரம் 2 ஆம் பாதம்
செவ் – 12 இல் தொழில் – Electrical Superintendent
தகைமை – B Engineer, HNDE
எதிர்பார்ப்பு – Lecturer, Doctor, Engineer, Accountant and Lawyer

பிறந்த திகதி – 1991.04.12 மதம் – இந்து
ஜாதி – வேளாளர் நட்சத்திரம் – பூரட்டாதி
செவ் – 2 இல் தொழில் – Canada
எதிர்பார்ப்பு – இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி – 1980.08.14 மதம் – இந்து
ஜாதி – வேளாளர் நட்சத்திரம் – உத்தரம் 1 ஆம் பாதம்
தொழில் – Supervisor Canada
எதிர்பார்ப்பு – இலங்கையில் படித்த அழகிய பெண்.

மணமகள் விபரம்

பிறந்த திகதி – 1992.12.10 மதம் – இந்து
ஜாதி – குருகுலம் நட்சத்திரம் – மிருகசீரிடம்
செவ் – 07 இல் தகைமை – Bachelor of Law
தொழில் – லண்டன்
எதிர்பார்ப்பு – இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி – 1983.11.13 மதம் – இந்து
ஜாதி – வேளாளர் நட்சத்திரம் – ஆயிலியம்
செவ் – 08 இல் தகைமை – கனடா விவாகரத்து
எதிர்பார்ப்பு – இலங்கையில் திருமணம் ஆகாதவர்களும் விரும்பத்தக்கது.

பிறந்த திகதி – 1990.10.04 மதம் – இந்து
ஜாதி – கோவியர் நட்சத்திரம் – உத்தரட்டாதி
செவ் – 07 இல் தொழில் – நெதர்லாந்து
தகைமை – Administration
எதிர்பார்ப்பு – இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி – 1983.12.27 மதம் – இந்து
ஜாதி – கோவியர் நட்சத்திரம் – அஸ்தம்
செவ் –7 இல் தகைமை – BA (இலங்கை)
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – இலங்கையில் அரச உத்தியோகம் புரியும் மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு – 001416661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்





(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையருக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார சேவையாளர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று காலை ஆரம்பமானது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகிய இருவரும் தடுப்பூசியைத் தங்களுக்கு ஏற்றி அந்த நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்களுக்கும் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றும் பணிகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 5 ஆயிரத்து 820 மருத்துவ சேவையாளர்கள், சுகாதாரத் துறையினருக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படைக்கு காணி வழங்கும் முயற்சி சிறிதரனின் எதிர்ப்பால் நிறுத்தம்!



வலி மேற்கு பிரதேசத்தில் இராணுவத்திற்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடுமையானஎதிர்ப்பைவெளியிட்டார். அதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

வலிமேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்ற போதே நாடாளுமன்ற உறுப்பினரால் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

வடக்கு மாகாணம் முழுவதும் காணிகளை இராணுவம், கடற்படை, விமானப்படை போன்றவை ஏற்கனவே கபளீகரம் செய்து வைத்திருக்கின்றன. இனியும் முப்படையினருக்கு எவ்வித காணிகளையும் வழங்க அனுமதிக்க வேண்டாம் என்று சிறிதரன் விடாப்பிடியாக இருந்தமையைத் தொடர்ந்து அந்தப் பிரேரணை நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ் இந்துவில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2002 ஆம் வருட உயர்தர மாணவர்களின் குருதிக் கொடை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் கோரிக்கைக்கு அமைவாக இந்தக் குருதிக் கொடை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.


குருதியின் தேவையின் பொருட்டும் ஏனைய பழைய மாணவர் (மற்றும் பொது) அமைப்புக்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

DCM யாழ் நகர்
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
A/L 2021, 2022
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2021 துரித மீட்டல் வகுப்புகள்
A/L 2022 அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள்
இடர்கால பாட அலகு மீட்டல் பிரத்தியேக வகுப்புகள்
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
077 011 9434
நிர்வாகம்




அண்ணா விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

4SIGHT OPTICALS
08B 1ம் மாடி கார்கில்ஸ் சதுக்கம் யாழ்ப்பாணம்.



அனைத்து விதமான மூக்குக் கண்ணாடிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park · Npcpark · northernpcpark · Northern PC Park

## தேவை
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை
தொடர்புகளுக்கு 0760117002

## தேவை
திருநெல்வேலியில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு அலுவலக பொறுப்பாளர்/கணக்காளர் தேவை. ஆங்கிலம்/கணினி அறிவு அவசியம்.
தொடர்புகளுக்கு 0760117002

## காணியும் வீடும் விற்பனைக்கு
சங்கானை Church Roadஇல் 10 பரப்புக் காணி, 02 வீடு என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 0769677845




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2021 இல் வெளியிடப்பெற்றது.